செந்தமிழ்ச் செல்வி

Acc. NO-38104

உள்ளுறை



செந்தமிழ்ச் செல்வி

(செந்தமிழ்த் திங்கள் வெளியீடு)

"செந்தமிழ்ச் செல்வி"

ஆண்டுக் கையொப்பம்

(Subscription Rates)

உள்நாடு ரு. 12 00 வெளிநாடு ரு. 20 00

ஆயுள் கையொப்பம்

உள்நாடு ரு. 120 00 வெளிநாடு ரு. 200 00

20.10.79

செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு ருச	திருவள்ளுவர் ஆண்டு உ௰௧௦, புரட்டாசி அக்டோபர் 1979	பரல் உ

பெரியார் நூற்றாண்டு விழாச் சிறப்பு

தமிழ்நாட்டின் தனிப்பெருந் தலைவராக விளங்கிய பகுத்தறிவுத் தந்தை பெரியார் ஈ. வே. இராமசாமி அவர்களின் நூற்றாண்டு விழா கடந்த ஓராண்டாகத் தமிழ்நாடெங்கணும், மற்றும் அயல்நாடுகளிலும் சிறப்புற நடைபெற்று நிறைவெய்தியுள்ளது. பெரியாரின் பெரும்புகழ் யாண்டும் பரவியுள்ளது.

வளமான செல்வக்குடும்பத்தில் பிறந்து வளர்ந்த பெரியார் தமிழ்நாட்டு முன்னேற்றத்தையே தம் வாழ்நாட் பெரும்பணியாகக் கொண்டு இறுதிக்காலம் வரை ஓயாது பாடுபட்டார். பேராயக்(Congress)கட்சியில் சேர்ந்து தொண்டாற்றினர். கள்ளொழிப்புப் போராட்டத்தில் முனைந்து நின்றார். தீண்டாமை ஒழிப்புப் போர் நடத்தி அண்ணல் திரு. வி. க அவர்களால் வைக்கம்வீரர் என்று பாராட்டப் பெற்றார். தமிழ்நாட்டுப் பேராயக் கட்சித் தலைவராகவும், ஈரோடு நகரவைத் தலைவராகவும் இருந்து சிறப்புறப் பணியாற்றினர்; மற்றும் பற்பல பொறுப்புக்களையும் ஏற்றுச் சிறப்பித்தார். இந்தியின் வல்லாண்மையைத் தொடக்க முதல் தொடர்ந்து எதிர்த்து வந்தமை அவருக்குரிய தனிச்சிறப்பாகும். மூடப் பழக்க வழக்கங்களையும் போலிக்கட்டுப்பாடுகளையும் அவர் சாடாத நாளில்லை; மேடையில்லை. தமிழின முன்னேற்றம், குறிப்பாகவும் சிறப்பாகவும் தாழ்த்தப்பட்டோர் மேம்பாடு பெரியார் அவர்களின் ஒப்பற்ற பெருந்தொண்டின் விளைவே என்பதில் ஐயமில்லை.

பெரியார் அவர்கள் தாம் தலையெடுக்கு முன்னரே தமிழின மேம்பாட்டிற்கான அறிவுப்பணியில் ஈடுபட்டு அயராது உழைத்து வந்த மறைத்திரு மறைமலையடிகளார்தம் சீர்திருத்தக் கருத்துக்

களாலும் செம்மை வாய்ந்த செயல்முறைகளாலும் கவரப்பெற்ருர். அவர்தம் அரும்பெருந் தொண்டுகளைப் பெரிதும் பாராட்டி வந்தார்; அடிகளார் நூலுக்குப் பார்ப்பனரிடமிருந்து எதிர்ப்பு வந்தபோது தாமே முனைந்து நின்று அவ்வெதிர்ப்பைப் புறங்கண்டார். பகுத்தறிவுத் தந்தை ஈ. வே. இரா அவர்கட்குப் **பெரியார்** என்னும் பட்டம், மறைமலையடிகளார்தம் திருமகளார் தனித்தமிழ்த் திருவாட்டி **நீலாம்பிகையம்மையார்** அவர்களின் தலைமையில் 13-11-1938 இல் சென்னையில் நடைபெற்ற மகளிர் மாநாட்டிலேயே வழங்கப் பட்டதென்பது ஈண்டு நினைவுகூரற்பாலதாகும். பெரியார் 18—4—1970இல் பல்லாவரம் மறைமலையடிகள் கலைமன்றத்திற்கு வருகை தந்து பெரிதும் மகிழ்ந்து பாராட்டுரை வழங்கியுள்ளார். பெரியார்தம் மாட்சிமைகளை முன்னமே ''செந்தமிழ்ச் செல்வி'' (சிலம்பு : 53 : பரல் 2)யில் ''பெரியார் நூற்ருண்டு விழா'' என்னும் தலைப்பில் விளக்கமாக எழுதியுள்ளோம்.

தமிழ்நாட்டு அரசும், பெரியார்தம் இயக்கமான திராவிடர் கழகமும் பெரியார் நூற்ருண்டுவிழாவினை இவ்வாண்டு முழுதும் மாவட்டந்தொறும் மிகவும் சிறப்பாகக் கொண்டாடியுள்ளமை பாராட்டத்தக்கது. தமிழ்நாட்டு அரசு பெரியார் கொள்கைகளைச் செயற்படுத்தும் முறையில் அவர் கைக்கொண்ட **எழுத்துமாற்றத்தை** ஒரு சிறிது ஏற்று நடைமுறைக்குக் கொண்டுவந்துள்ளது. இதில் தமிழறிஞர்கட்குள் கருத்து வேறுபாடு இருந்துவருகிறது. பெரியார்தம் பெரும்புகழை நிலைநிறுத்தும் நோக்கொடு தமிழ்நாட்டரசு கோவை மாவட்டத்தை இரண்டாகப் பிரித்துப் **பெரியார்** மாவட்டத்தைத் தோற்றுவித்துள்ளது; வேலூரில் உள்ள மாவட்ட நடுவண் நூலகத்திற்குத் **தந்தை பெரியார் ஈ. வே. இராமசாமி மாவட்ட மைய நூல்நிலையம்** என்று பெயர் மாற்றஞ் செய்யக் கட்டளை பிறப்பித்துள்ளது; சென்னையிலுள்ள பூந்தமல்லி நெடுஞ்சாலைக்குப் பெரியார் சாலை எனப் பெயர் சூட்டியுள்ளது. தமிழ்நாட்டில் அடுத்துத் தோன்றவிருக்கும் பல்கலைக் கழகத்திற்குப் பெரியார் பெயர் சூட்டப் படும் என்று அறிவித்துள்ளது.

வாழ்க பெரியார் புகழ்! வெல்க அவர்தம் நலமிக்க கோட்பாடுகள்!!

———

அவர் தாம் பெரியார்!

தொண்டு செய்து பழுத்த பழம்
தூயதாடி மார்பில் விழும்
மண்டைச் சுரப்பை உலகு தொழும்
மனக் குகையில் சிறுத்தை எழும்
அவர் தாம் பெரியார்!

—**புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்.**

சிலம்புச் செல்வர் ம. பொ. சி.க்கு "டாக்டர்" பட்டமளிப்பு விழா

தமிழ்நாட்டுச் சட்டமன்ற மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம் அவர்களுக்குச் சென்னைப் பல்கலைக் கழகம், கடந்த 28—9—79 அன்று "டாக்டர்" பட்டம் வழங்கி யுள்ளமை பெரிதும் பாராட்டத் தக்கதாகும். திரு. சிவஞானம் அவர்களின் தமிழிலக்கியப் புலமை, பணி ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு இப் பட்டத்தை வழங்கப் பல்கலைக் கழகப் பேரவையும், ஆட்சிக் குழுவும் முடிவுசெய்த வண்ணம் இச் சிறப்பு நிகழ்ச்சி செவ்வனே நிறைவேறியுள்ளது. பட்டப் படிப்பில்லாதார் சென்னைப் பல்கலைக் கழகத்தில் "டாக்டர்" பட்டம் பெறுவதில் ம. பொ. சி. இரண்டாமவராவர். பட்டப்படிப்பில்லாத உ. வே. சாமிநாத ஐயரவர்களின் பரந்து பட்ட தமிழ்ப் புலமைக்காகவும் தமிழ் நூற் பதிப்புத் தொண்டிற்காகவும் சென்னைப் பல்கலைக் கழகம் 1932ஆம் ஆண்டில் முதன் முறையாக "டாக்டர்" பட்டம் வழங்கிச் சிறப் பித்தது. அடுத்து அந் நிலையில் சிலம்புச் செல்வரே அப் பட்டம் பெற்றுள்ளார். கலைஞர் கருணாநிதி அவர்கட்கு அண்ணாமலைப் பல்கலைக் கழகம் "டாக்டர்" பட்டம் வழங்கியுள்ளது.

சென்னை ஆயிரம்விளக்குப் பகுதியில் ஓர் எளிய குடும்பத்தில் 1906ஆம் ஆண்டு சூன் திங்கள் 26ஆம் நாள் பிறந்த ம. பொ. சி. தம் அயரா உழைப்பாலும் உறுதியான உள்ளத்தாலும் தம் வாழ்வில் உயரிய நிலையை எய்தியுள்ளார்.

தம் இளம் பருவத்திலேயே, 2ஆம் வகுப்போடு பள்ளிப் படிப்பைக் கைவிட்ட சிவஞானம் அச்சுக் கோப்பாளராகத் தம் வாழ்க்கையைத் தொடங்கினர். காந்தியடிகளின் கொள்கைகளால் கவரப்பெற்ற அவர் பேராயக் கட்சியின் தொண்டரானர்; அக் காலத்தில் கொந்தளித்துக்கொண்டிருந்த இந்திய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டார்; ஆங்கிலேயப் பேரரசின் அடக்கு முறைக்கு ஆட்பட்டார்; சிறையிலடைக்கப் பெற்றார். சிறைக்கூடம் அவருக்குக் கல்வி யார்வத்தைத் தூண்டியது; தமிழ்ப்பற்றையும் அறிவையும் உணர்வையும் வளர்த்தது. பொதுநலத் தொண்டில் முனைந்து ஈடுபடச்செய்தது.

திரு. சிவஞானம் அவர்கள் 1935-37 வரை மூன்றுண்டுகள் சென்னை-தண்டையார்பேட்டையில் தாம் அமைப்புச் செயலாளராக

இருந்த கிராமணிகுல மகாசன சங்கத்தின் சார்பில் கள்ளிறக்கும் தொழிலாளர்கட்கு காசிலா இரவுப் பாடசாலை ஒன்றைத் தொடங்கி அதில் ஆசிரியராகத் தொண்டாற்றினர். 1934-35இல் சென்னை-இராயபுரம் இராபின்சன் பூங்காவில் இயங்கிய திருவள்ளுவர் வாசக சாலையின் செயலாளராகப் பணியாற்றினர். 1940இல் சென்னை-தண்டையார்பேட்டையில் சொந்த முயற்சியால் தமிழ்த்தாய் நூலகம் நிறுவி அதனைத் திறம்பட நடத்தினர்.

முத்தமிழ்ப் பேரிலக்கியமான சிலப்பதிகாரத்தை ஓதி யுணர்ந்து இன்புற்ற சிவஞானம் அவர்கள் அதனைப் போற்றிப் பரப்புவதே தம் தனிப்பெரு நோக்கமாகக் கொண்டார். சிலப்பதிகார மாநாடு, இளங்கோவடிகள் விழாக்கள் பலவற்றை நடத்தினர். டாக்டர் இரா. பி. சேதுப்பிள்ளை அவர்களால் சிலம்புச் செல்வர் என அழைக்கப் பெற்று அதனையே தம் சிறப்புப் பெயராகக் கொண்டார். சிலப்பதி காரத்தில் இவருக்குள்ள பயிற்சி தமிழ்ப் பேராசிரியர்களையும் வியப் படையச் செய்வதாகும்.

இந்திய விடுதலைக்குப் பின்னர் மொழிவழி மாநிலம் பிரிக்கப் பட்டகாலை அண்டை மாநிலத்தவர்கள் சென்னை மாநிலத்தின் எல்லையை மிகவும் சுருக்க முனைந்தனர். தமிழகத் தலைநகரான சென்னை மாநகரத்தையேகூட ஆந்திரர்கள் தம்முடையதாக்கிக் கொள்ள விழைந்தனர். அற்றை நாளில் சிலம்புச் செல்வரின் தலைமையிலமைந்த தமிழரசுக் கழகமே முனைந்து நின்று தமிழக எல்லைப் போராட்டத்தில் ஈடுபட்டது. இவ் வெல்லைப் போராட்டமே ம. பொ. சி. க்கும் அவர்தம் கழகத்தார்க்கும் அழியாப் பெரும் புகழை ஈட்டித்தந்தது. திருவேங்கடமும், திருக்காளத்தியும் ஆந்திரர்க்கு உரிமையாயினும், மணிமன்றமாகிய திருவாலங்காடும், தணிகை மலையும் தமிழர்க்கு உரிமையாயின. 'கங்கை கொண்டான்', 'கடாரங் கொண்டான்' என்பது போலச் சிவஞானம் 'தணிகை கொண்டான்' என்னுஞ் சிறப்புப் பெயருக்கு உரியவரானர்.

தமிழ்மக்களின் கல்வி வளர்ச்சியில் பெரிதும் அக்கறை கொண்டவர் ம. பொ. சி. தமிழே அனைத்து நிலைகளிலும் பயிற்று மொழியாக விளங்கவேண்டும் என்பது அவர்தம் நீண்ட நாளைய கோரிக்கை. ஆங்கிலத்தின் வல்லாண்மையை எதிர்த்து அவர் தொடர்ந்து குரல் கொடுத்துக் கொண்டிருக்கின்றார். தமிழ் பயிற்று மொழியாகுந் திட்டம் படிப்படியாகச் செயல்படத் தொடங்கியுள்ளது என்பது ஈண்டுக் குறிப்பிடத் தக்கதாகும். இவர் சென்னைப் பல்கலைக் கழகத்தில் 1952-54ஆம் ஆண்டுகளில் பேரவை உறுப் பினராகவும், 1972-76ஆம் ஆண்டுகளில் ஆட்சிக் குழு உறுப்பின

ராகவும் பணியாற்றியுள்ளார். மதுரை, அண்ணுமலைப் பல்கலைக் கழகங்களிலும் பணியாற்றியுள்ளார்; முப் பல்கலைக் கழகங்களிலும் குழுக்கள் பலவற்றில் பணியாற்றிய சிறப்பும் இவருக்கு உண்டு.

தாமே முயன்று பயின்று மற்றவர்கள் வியப்படையும் அளவிற்குத் தம் அறிவைப் பல துறைகளில் வளர்த்துக்கொண்ட சிவஞானம் அவர்கள் சிறந்த பேச்சாற்றலும் எழுத்தாற்றலும் வாய்ந்தவராவர். சிறியனவும் பெரியனவுமாக இதுவரையில் 102 நூல்கள் இவரால் எழுதப்பட்டுள்ளன. அவையெல்லாம் தமிழ் மொழி, தமிழினம், தமிழ்நாடு, தமிழர் சமயம், தமிழ்க்கலை, இந்திய ஒற்றுமை முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டன; அவற்றைக் காத்தலும் வளர்த்தலுமே நோக்கமாகக் கொண்டு உருவாக்கப் பட்டன.

இவர் எழுதிய முதல் நூல் விடுதலைப் போராட்டத்திற்கு வித்திட்ட வ. உ. சிதம்பரனாரவர்களைப் பற்றிய ''கப்பலோட்டிய தமிழன்'' என்பதாகும். அஃது 1943இல் வெளிவந்தது. இவர்தம் 102 ஆவது நூலான ''காந்தியடிகளைச் சந்தித்தேன்'' என்பது இவ்வாண்டில் வெளிவந்துள்ளது. சிலப்பதிகாரம், திருக்குறள், கலிங்கத்துப்பரணி, கம்பராமாயணம், திருவருட்பா, சுப்பிரமணிய பாரதியார் பாடல்கள் முதலியவற்றைப் பற்றி இவர் திறனாய்வு நூல்கள் பலவற்றை வெளியிட்டுள்ளார். அருட்பா ஆராய்ச்சியாகிய ''வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு'' என்னும் இவருடைய நூல் 1966இல் சாகித்திய அகாடமியின் பரிசு பெற்றதாகும். தன் வரலாற்று நூலாக இவர் ''எனது போராட்டம்'' என்னும் பெரு நூலை எழுதியுள்ளார். அதன் இரண்டாம் பகுதி இப்போது ''செங்கோல்'' என்னும் இதழில் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கின்றது.

1964-65 ஆம் ஆண்டுகளில் ம. பொ. சி. மலேசியாவிலும், சிங்கப்பூரிலும் தமிழ்ப் பண்பாடு குறித்தும் தமிழிலக்கியம் குறித்தும் பல சொற்பொழிவுகள் நிகழ்த்தியுள்ளார். 1966இல் கோலாலம்பூரிலும், 1968இல் சென்னையிலும், 1970இல் பாரிசிலும் நடந்த உலகத் தமிழ் மாநாடுகளில் இவர் பங்கேற்றுர். ''மலேசியாவில் ஒரு மாதம்'', ''மாஸ்கோவிலிருந்து லண்டன் வரை'' என்பன இவர் எழுதிய சுற்றுலா நூல்களாகும்.

திரு சிவஞானம் அவர்கள் எழுதிய ''கப்பலோட்டிய தமிழன்'', ''வீரபாண்டிய கட்டபொம்மன்'', ''கம்பர் கவியின்பம்'', ''பாரதியாரின் பாதையிலே'', ''வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு'',

''கலிங்கத்துப்பரணி'' என்னும் நூல்கள் பல்வேறு நிலைகளில் பள்ளி கல்லூரி மாணவர்கட்குப் பாடநூல்களாக வைக்கப்பட்டன என்பது மகிழ்ச்சிக்குரியதாகும்.

பல நூல்களின் ஆசிரியரான ம. பொ. சி. சிறந்த இதழாசிரியருமாவார். 1935-36இல் **கிராமணி குலம்** என்னும் திங்கள் இருமுறை இதழும், 1946இல் **தமிழ் முரசு** என்னும் திங்கள் வெளியீடும் இவரை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்தன. 1947இல் தமிழ் முரசு திங்கள் இருமுறை இதழாயிற்று; பின் கிழமை இதழாகவும் வெளிவந்தது. 1951இல் **செங்கோல்** என்னும் பெயரில் கிழமையிதழை ஆசிரியராக இருந்து நடத்தத் தொடங்கினர். 1954இல் **தமிழன் குரல்** என்னும் திங்கள் இதழையும் தொடங்கினர். செங்கோல் இன்றும் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கின்றது. இப்போது அவர் திருமகனுரான திரு. ம. சி. **திருநாவுக்கரசு** அதன் ஆசிரியராக விளங்குகின்றார்.

இளம்பருவ முதலே நூலக இயக்கத்தில் ஈடுபாடு கொண்டவர் ம. பொ. சி. 1953-55இலும், 1972-75இலும் சென்னை மாவட்ட நூலக ஆணைக் குழுவின் தலைவராக அவர் விளங்கினர். அவர் பதவிக்காலம் முடிவதற்கு மூன்று திங்கட்கு முன்பு, பள்ளி முதன்மைக் கல்வி அதிகாரி திருவாளர் டி. கிருட்டிணமூர்த்தி அவர்கள் செயலாளராக இருந்தபோது பெருந்தொகைக்குக் கழக நூல்களை வாங்கியது கழகத்தின் நூல் வெளியீட்டுக்கும் அறப்பணிகட்கும் காலத்தினற் செய்த செய்தக்க பேருதவியாகும். 1973-75இல் தமிழக நூலக ஆணைக்குழுவின் உறுப்பினராகப் பணியாற்றியுள்ளார்.

தமிழரசுக் கழகம் என்னும் பெயரில் ஓர் அரசியல் குமுகாய அமைப்பை நிறுவி அதன் தலைவராகத் தொடர்ந்து பணியாற்றி வருகின்றார். இவர் இயக்கம் நேரடியாக ஆட்சிப் பொறுப்பைக் கைப்பற்ருவிட்டாலும் ஆட்சிப் பொறுப்பில் இருப்பவர்களிடம் தன் கொள்கையை வலியுறுத்திச் செயற்படுத்தத் தூண்டி நிறைவேற்றிக் கொள்ளும் நோக்கமுடையதாகும். சென்னை மாநகராட்சியில் 1948-55இல் கண்ணிய உறுப்பினராகப் பணியாற்றியவர் ம. பொ. சி. 1952இல் சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும், 1967இல் சட்டமன்றப் பேரவை உறுப்பினராகவும், 1972இல் மேலவைத் துணைத் தலைவராகவும் 1978இல் மேலவைத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப் பெற்றார்; அமர்த்தப்பெற்றார். இவர் எந் நிலையில் இருந்தாலும் தம்முடைய கொள்கைகளைச் சற்றும் விட்டுக் கொடுக்காமலும், கூடுமானவரை வலியுறுத்திக்கொண்டும்

மற்றவர்கட்கு நட்பாகவும், நயமாகவும், சார்பாகவும் இருந்து தம் கருத்துக்களை நிறைவேற்றிக்கொள்வதில் வல்லவராவர். தமிழ் நாட்டில் பேராயக்கட்சி ஆட்சியிலிருந்த காலத்தும், தி. மு. கழகம், ஆட்சி நடத்திய போதும், அ. இ. அ. தி. மு. க. ஆட்சி நடை பெறும் இற்றை நாளிலும், மற்றக் கட்சிகளின் பகைமைக்கு ஆளாகாமலே ஆளுங் கட்சிக்குச் சார்பாக இருந்து தம் சாய்சாலேப் பெருக்கிக்கொண்டு நன்முறையில் செயற்பட்டுவருவது குறிப்பிடத் தக்கது காலப்போக்கிற் கேற்பத் தம் நடைமுறைகளைப் புதுக்கிக் கொண்டு வெற்றி காண்பது இவர்தம் தனிச்சிறப்பு எனலாம்.

1956இல் சிலம்புச் செல்வருக்குப் பொன்விழா நடைபெற்றது. அவ் விழாவில் அவர்க்குச் **செந்தமிழ்ச் செல்வர்** என்னும் பட்டம் வழங்கப்பட்டது. 1972இல் இந்திய நடுவணரசு அவர்க்குத் **தாமரைச் செல்வர்** (பத்மஸ்ரீ) என்னும் பட்டத்தை யளித்தது. 1976இல் தமிழ்நாட்டு இயலிசை நாடக மன்றத்தினர் **கலைமாமணி** என்றும், முத்தமிழ்ப் பேரவையினர் **இயற்செல்வம்** என்றும் பட்ட மளித்தனர். மற்றும் மதுரை மாவட்டத் தமிழாசிரியர் கழகம், நெல்லை நல்வழி நிலையம், வடார்க்காடு மாவட்டச் சன்மார்க்கச் சங்கம் ஆகியவற்றின் சார்பில் ம. பொ. சி. பல்வேறு பட்டங்கள் அளிக்கப்பெற்றுள்ளார்.

பாரதியார் கருத்துக்களைப் பரப்பியவர் என்பதற்காகச் சென்னைப் பாரதியார் சங்கமும், சிறந்த எழுத்தாற்றல் உடையவர் என்பதற்காகத் தமிழக எழுத்தாளர் சங்கமும், வணிக மகளான கண்ணகியின் புகழ் பரப்பியவர் என்பதற்காகத் தென்னிந்திய வணிக வைசியர் சங்கமும் தத்தம் நிகழ்ச்சிகளில் ம. பொ. சிக்கு **வெள்ளிக் கேடயங்களை** வழங்கியுள்ளன. இந்திய விடுதலைப் போரில் சிறை சென்றவர் என்பதற்காக 1972இல் இந்திய நடுவணரசின் சார்பில் **செப்புப்பட்டயம்** வழங்கப்பட்டுள்ளது. மற்றும் பல்வேறு நிகழ்ச்சிகளில் அன்பர்கள் அவருக்குப் பணமுடிப்புகளும், கணை யாழிகளும், மகிழுந்தும் பிறவும் கொடையாக வழங்கியுள்ளனர்.

திரு. சிவஞானம் அவர்கள் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திடமும், கழக ஆட்சியாளர் **செந்தமிழ்ச்செல்வர் வ. சுப்பையா** அவர்களிடமும் பற்றும் நன்மதிப்பும் கொண்டவராவர். கழகப் பணிகளைப் பெரிதும் பாராட்டும் நல்லியல்பு வாய்ந்தவர். கழக விழாக்களிலெல்லாம் தவருமல் கலந்துகொண்டு சிறப்பித்துள் ளார். 1968இல் கழகம் நடத்திய திருவள்ளுவர் பெருவிழாவில் சிறப்புரையாற்றினர். 1970இல் நடைபெற்ற கழகப் பொன்விழா வில் சமய மாநாட்டில் கலந்துகொண்ட சிலம்புச் செல்வரின்

பேருரை சேக்கிழாரும் சீர்திருத்தமும் என்னும் பொருள் பற்றியதாக அமைந்தது. அது கழக வெளியீடான "பெரிய புராணச் சொற் பொழிவுகள்" என்னும் நூலிலும் எழுத்து வடிவம் பெற்றுள்ளது. 1973இல் நிகழ்ந்த கழக ஆட்சியாளர் பவளவிழாவில் கலந்து கொண்டு ம. பொ. சி. பாராட்டுரை வழங்கினுர். 1977இல், கழகத் தின் திங்கள் வெளியீடான **செந்தமிழ்ச் செல்வியின் பொன்விழா** சிலம்புச் செல்வரின் தலைமையில் நடைபெற்றது. 1978இல் நடை பெற்ற சிலப்பதிகார ஆங்கில மொழிபெயர்ப்பு நூல் வெளியீட்டு விழாவிற்குச் சிலம்புச் செல்வராம் அவர் தலைமை தாங்கிச் சிறப்புரை யாற்றியது மிகவும் போற்றுதற்குரியது.


சிலம்புச் செல்வர் ம. பொ. சி. உழைப்பால் உயர்ந்தவர்; தமிழ்ப்பற்றும் சமயப்பற்றும் மிக்கவர். தமிழே எல்லா நிலையிலும் பயிற்சி மொழியாக விளங்க வேண்டும் என்னும் உறுதியான கொள்கையாளர். ஆங்கிலத்தின் வல்லாண்மையினைத் துணிந்து எதிர்க்கும் திறலினர். இந்தி வல்லாண்மையை முனைந்துநின்று எதிர்த்தும், தமிழை வழிபாட்டு மொழியாகப் போற்றியும், தனிச் செந்தமிழைக் கடைப் பிடித்தும் செயற்பட்டிருப்பராயின் நிறைபுலச் செம்மல் **மறைமலையடிகளார்** தம் மாண்புறு கொள்கைகளைக் கடைப் பிடித்துவரும் அறிஞர் பெருமக்களும், இளந்தலை முறையினரும் பேருவகை கொள்ளுமாறு இவர்தம் தமிழ்த்தொண்டு இன்னும் எத்தனையோ மடங்கு சிறப்புற்றிருக்கும். ஆயினும் இவர் தமிழ்ப் பற்றுக்கு நிகர் இவரே என்பதில் சிறிதும் ஐயமில்லை. தம் முயற்சி யால் கல்வி கற்றுப் பன்னூல் ஆசிரியராகவும் இதழாசிரியராகவும், அரசியல் இயக்கத் தலைவராகவும் சிறப்புற விளங்கும் இவர் திறம் பெரிதும் பாராட்டற்பாலது. இவருக்கு "டாக்டர்" பட்டமளித்த பல்கலைக் கழகமும் நம் பாராட்டுக்குரியதாகிறது.

மதிப்புக்குரிய சிவஞானம் அவர்கள் தம் பேரன்பிற்குரிய நாடகப் புகழ்பெற்ற உடன்பிறந்தார் தி. க. சண்முகம், தி. க. பகவதி ஆகியவர்களுடன் பல்லாவரம் மறைமலையடிகள் கலை மன்றத்தையும், சென்னையில் சிறப்புற்று விளங்கும் மறைமலை அடிகள் நூல்நிலையத்தையும் பார்வையிட்டுப் பாராட்டுரை வழங்கியுள்ளார்.

ம. பொ. சி. நீடினிது வாழ்ந்து சிவநெறிக்கும், செந்தமிழுக் கும் தமிழர் கலை, நாகரிகம், பண்பாடு ஆகியவற்றுக்கும் தொடர்ந்து நற்பணியாற்றுமாறு இறைவன் திருவருளை வழுத்தி வேண்டு கின்றேம்!

———





தமிழின் தலைமையை நாட்டும் தனிச்சொற்கள்

[ஞா. தேவநேயன்]

19. பொறு

பொறுத்தல் = 1. சுமத்தல். சிவிகை பொறுத்தானோடூர்ந்தானிடை'' (குறள். 37), ''இசையிலா யாக்கை பொறுத்த நிலம்'' (ஷ 239) 2. தாங்குதல். ''ஆலத்து......நெடுஞ்சினை வீழ் பொறுத்தாங்கு'' (புறநா. 58). 3. அணிதல். "அம் மணி பொறுத்திரென் றறைந்தான்'' (உபதேசகா. உருத்திராக். 44). 4. நோவு தாங்குதல். 5. துன்பம் பொறுத்தல். 6. மனந்தாளுதல். "பொறுக்கி லேனுடல் போக்கிடங் காணேன்'' (திருவாச. 23 : 6). 7. ஒரு வினையைச் சற்று நிறுத்திவைத்தல். பொறு, அப் புறம் உண்ணலாம் (உ. வ.) 8. காலத்தாழ்த்தல். ஒரு மணிநேரம் பொறுத்து வந்தான். 9. நீண்ட காலந் துன்பப்பட்டு அமைதியாயிருத்தல். 10. ஒன்றிற்குப் பொறுப்பாதல். அது உன் பொறுப்பு. 11. மன்னித்தல். 12. இளக்காரங் கொடுத்தல். 13. மரக்கலம் நிலந்தட்டுதல். தோணி பொறுத்துப் போய்விட்டது. 14. செலவு தாக்குதல். வண்டி உடைந்து விட்டால் ஆயிரம் உருபா உன்னைப் பொறுத்து விடும். 15. உவமையாகத் தகுதல். ''உலம்பொறுக்கலாத தோளாய்'' (சீவக. 402).

பொறுக்க = நிரம்ப, மூக்கு முட்ட, அளவிற்கு மிஞ்சி. பொறுக்கப் பிடித்துவிட்டான். (கொச்சை வழக்கு).

பொறுதி = பிறர் குற்றம் பொறுத்தல்.

பொறுப்பு = ஒரு கடமை நிறைவேற்றத்தை அல்லது வினைத் தவற்றை ஏற்றுக்கொள்ளுதல்.

பொறுமை = நீண்டகாலம் ஒன்றிற்கு அமைதியாகக் காத்திருத்தல்.

பொறை = நீண்டகாலந் துன்பம் பொறுத்தல்.

பொறாமை = பிறராக்கங் கண்டு மனம் புழுங்குதல். பொறுத்தல் என்னுஞ் சொல்லிற்கு மேற்கூறிய பொருள்களெல்லாவற்றிற்கும்

அடிப்படையானது சுமத்தல் என்பதே அது உடம்பாற் சுமத்தலும் உளத்தாற் சுமத்தலும் என இருதிறப்படும். அவற்றுள் முந்தியதே முன்னது.

பொறு என்னும் தூய தென்சொல், கன்னடம், மலையாளம், துளு, குடகம், கோத்தம், துடவம் முதலிய திரவிட மொழிகளில் மட்டுமன்றி, ஆரிய மொழிகள் அனையவற்றிலும் சென்று வழங்குவது, கீழ்வரும் எடுத்துக்காட்டு விளக்கத்தால் அறியப்படும்.

பொறு—**E** *bear*, to carry, **OE**. *beran*, **ON**. *bera*, **OFris**. *bera*, **Du**. *baren*, **OHG**. *beran* to bear, carry. **Goth**. *bairan*, to bear, carry, give birth to, **OHG**. gi-*beran*, **MHG**. ge*bern*, **G**. *gebaren*, **Arm**. *beram*, I bear, carry, bring, *bern*, burden, **Gk**. *pher*, *pherein*, to bear, carry, **L**. *fer*, *ferre*, to bear, carry, **Celt**. *ber*, **Alb**. *mbar*, *bar*, I carry, drag, *bir*, son, **OSlav**. *bro*, *birati* (for earlier *birti*), to bring together, collect, take, *breme*, burden, **Slavonic** *ber*, *brati*, **OIr**. *biru*, I carry, **W**. *cymeraf*, I take, **Toch**. *pār*, to bear, bring, fetch, **Zend**. *bar*, *ber*, **Skt**. *bhar*, to bear, carry.

ஆங்கிலச் சொற்கள்

bear, to carry.

bearer, peron or thing that carries, personal servant, bringer of letters or message, possessor of shares. **L**. *ferter*.

bearing, outward behaviour, relation, reference, part of machine that bears the friction.

bairn, child, that which is born.

barley, what the earth bears or brings forth. **AS**. *bere*, barley; **bier-lic**—*barley* (Max Muller).

barrow, two-wheeled handcart for carrying things.

berth, adequate sea-room for ship, sleeping place in ship, train, etc., naut, use of birth.

bier, movable frame on which coffin or corpse is carried to the grave.

birth, the act of being born.

burden, what is borne or carried.

சமற்கிருதச் சொற்கள்

bhri, to bear, carry, convey, to hold (on or in), **RV.**

bhrit, bearing, carrying, bringing, supporting maintaining, etc.

bhrita, borne, carried, gained, etc.

bhritaka, brought, fetched, hired, etc.

bhriti, bearing, carrying, support, maintenance, etc.

bhritya, to be nourished, maintained, a dependent, servant of a king, minister.

bhara, bearing, conveying, supporting, maintaining, etc.

bharana, bearing, maintaining.

bharat, bearing, carrying, RV.

Bharata, son of Dushayanta and Sakuntala.

Bharata varsha, country of Bharata, name of India.

Bharata khanda, name of a part of B. V.

bhari, bearing, possessing, nourishing.

bhariman, supporting, nourishing.

bhartri, a bearer, one who bears or carries, or maintains, a preserver, protector, maintainer, chief, lord, master.

bhartrika, a husband. **bhara,** weight, load.

Bharata, descended from Bharata.

Bharati, a female descendent of Bharata., N. of a deity (in RV. often invoked among the Apri delties and esp. together with Iḷā and Sarasvati); ac:ord to Nir. viii, 13, a daughter of Aditya; later identified with Sarasvati, goddess of speech).

இலத்தீனில் மறுவடிவச் சொல்

L. *portare*, to carry, **F.** *porter*, **E.** *port*, to carry.

L. *portabilis*, **F.** *portable*—**E.** *portable*, that can be carried.

L. *portatus*, **F.** *portaticum*, **E.** *portage*, the act of carrying.

E. *portamento*, glide from one tone to another.

L. *portatorem*, **F.** *porteur*, **ME.** *portour*, **E.** *porter*, carrier,

L. *portare*, **It.** *portatoglis*, lit, carrier of leaves., *porto folio*, **E.** portfolio.

F. *porte-manteau*, lit. 'cloak bearer'. **E.** portmanteau. a large traveling bag consisting of two compartments, *portare* என்னும் இலத்தீனச் சொல்லிற்கு வேறுவழியில் நலிந்தும் வலிந்தும் மூலங்காட்டியிருப்பது பொருந்தாது.

பொறு என்பதன் திரிசொல்லை வநுஞ்சொல்லாகக் கொண்ட மேலையாரியக் கூட்டுச்சொற்கள்

fer: confer, defer, differ, infer, lucifer, offer, prefer. proffer, refer, suffer, transfer.

ferate: vociferate.

ference: difference, circumference, conference.

phor: metaphor, phosphor.

phora: cataphora, anthyopo phora.

phore: semaphors, ctenophore.

phoreo : **Gk.** diaphoreo, to carry through.

phoron : **Gk.** adisphoron.

phorous : phosphorous, adiophorous.

phery : periplery.

port : deport, disport, export, import, rapport, report, support, transport.

கால்டுவெலர் சொல்லாராய்ச்சி.

Glossarial Affinities-West Indo-European Family. "**poru,** to sustain to bear, to suffer pationtly, *poṟuppu*, responsibility, *poṟumei* patience. Comp. Sans. *bhri* (bhar), to bear; Gothic *bairan*, *bār*, *bēram*, to bear; Old High German *bēram*, *pēran*; "English *bear*, *bore*; Old English *bearn*, - child; Greek *phero*; Latin *fer-o*. Tamil distinguishes between this word and *piṟa*; to be born......Latinin like manner distinguishes between *par-io* and *fer-o*, whilst the Teutonic tongues make no difference between *bear*, to sustain, and *bear*, to bring forth. They constitute one word, from which is formed the past participle to be born or borne and also the noun birth."

பிறந்தை என்னும் தமிழ்ச் சொல்லே 'birth' என்னும் ஆங்கிலச் சொல் ஒத்திருத்தலால், பிறப்பு வினையைக் குறிக்க வேறொரு சொல்லும் தியூத்தானிய மொழிகளில் முதலில் வழங்கிப் பின்பு மறைந்திருக்கலாம்.

கால்டுவெலர், பொறு என்னும் தென்சொற்கு இனமான ஆரியச் சொற்களை, தாமே கண்டிருப்பது இங்குப் பெரிதுங் கவனிக்கத்தக்கது.

மாக்கசுமுல்லர் ஆராய்ச்சியுங் கூற்றும்

"No one can help seeing that even amongst the most ordinary words in English there are some which are very much alike in sound. If these words have also some similarity in meaning we are justified in supposing that they may have a common origin.

"Take for instance, such words as, *to bear*, *burden*, *bier*, and *barrow*. They all have the same constituent clement, namely, *br*; they all have a meaning connected with bearing or carrying. *Burden* is what is carried; *bier*, what a person is carried on; *barrow*, in wheel-barrow, an implement for carrying things.

"No doubt, this is only *prima facie* evidence. We must not forget that we are dealing with a modern language which has passed through many vicissitudes. In order to institute truly scientific comparisons, we should have in each case to trace these words to their Anglo-Saxon, or even to their corresponding Gothic forms.

"But though it is neeessary, before we institute com parisons, always to go back to the oldest forms of words which are within our reach, still for practical purposes it suffices if we know that such words as *bear*, *burden*, *bier* and *barrow* have all been proved to come from one common source.

"And more than this. As *to bear* is used in many languages in the sense of bearing children, we may safely trace to the same source such English words as *birth*, and *bairn*, a child.

"Nay, as the same expression is also used of the carth-bearing fruit, we can hardly be wrong in explaining, for instance, *bar-ley*, as what the earth bears or brings forth. In German *Getrcide*, M· H. G. *Getregede*, literally, what is born, has become the name of every kind of corn. If we go back to Anglo-Saxon, we find *boer-lic* for barley, in which *lic* is derivative, while *bere* by itself meant barley. In Scotland more particularly *bear* continued to be used for barley and a coarse kind of barley is still called *bear-barley*. *Barn* also receives the explanation from the same quarter. For *barn* is contracted from *bere-oern*, which means barley-house, or, as also called, bere-flor

"But now we shall be asked, What are those mrysterious syllables? What is, for instance, that *bar*, which we discovered as the kernel of ever so many words?

"These syllables have been called *roots*, That is, of course, nothing but a metaphorical expression.........In *burden*, *den* is formative; in *birth*, *th* is formative; in *bairn*, *n* is formative. In *barn*, too, *n* is formative, but it is different from the *n* in *bairn*, because it is really a contraction of *oern*. *Bere-oern* meant a place for bar-ley, just as *horsern* meant a place for horses, a stable, *sleepern*, a sleeping place.

"There remains therefore *bar* with a variable vowel, and this we call a root, or an ultimate clement, of speech, because it cannot be analysed any further.

"This root *bar*, however, is not an English root. It existed long before English existed, and we find it again in Latin, Greek, Celtic, Slavonic, Zend, and Sanskrit, that is, in all the languages which form what is called the *Aryan family* of speech. As this root *bar* exists in Latin as *fer*, in Greek as *pher*, in Celtic as *ber*, in Slavonic as *ber*, in Zend as *bar*, and in Sanskrit as *bhar*, it is clear that it must have existed before these languages separated, and that, as you may imagine, must have been a very, very long time ago."

—Three Lectures on the Science of Language, pp. 20-23.

புல்—பொல்—பொர்—பொரு—பொறு. [பொருதல் = பொருந்துதல், பொருந்தித் தாங்குதல். ஒ. நோ : முட்டுதல் = பொருந்துதல், பொருந்தித் தாங்குதல். முட்டுக்கொடுத்தல் என்னும் வழக்கை நோக்குக. பொரு—பொருப்பு = வான்முகட்டைத் தாங்குவதாகக் கருதப்பட்ட மலை. Atlas என்னும் இலிபிய (Libeya) நாட்டுமலை வான்முகட்டைத் தாங்குவதாக, பழங்காலக் கிரேக்கரால் கருதப்பட்டமையை நோக்குக.

இதினின்று, உலக முதன்மொழியும் திரவிடத்திற்குத் தாயும் ஆரியத்திற்கு மூலமுமான தமிழினின்றே, சுமத்தலைக் குறிக்கும் (மேற்காட்டிய) ஆரியச் சொற்களெல்லாம் திரிந்துள்ளனவென்று, தெற்றெனத் தெரிந்துகொள்க.

உலகத் தலைவராய் உயர்ந்த பெரியார்!

(புலவர்மணி, நல்லாசிரியர், இரா. திருஞானசம்பந்தன்)

உலகோர் போற்றும் உயர்தமிழ் நாட்டில்
நிலவும் புகழுறு பெரியோர் பலருள்
தந்தை பெரியார் தன்னே ரில்லாச்
சிந்தை மகிழ்செய் செந்தமிழ்ப் பெரியார்
ஒன்றே குலமென இருந்த நாட்டில்
ஒன்பது நூறாய் விளங்கல் கண்டே
கன்றிய மனத்தராய் ஒழிக்கப் பார்த்தார்
மேற்குடி மாக்கள் வெறுக்கவே இவர்தாம்
தன்மான இயக்கந் தனியாய்த் தோற்றியும்
முதல(ம்)மை மறைய மணியை மணந்தார்
நீதிக் கட்சியின் தலைவராய் இருந்தும்
ஆற்றிய தொண்டோ அளவில அளவில
உண்டிச் சாலையில் சாதிக் கோரிடம்
என்றே இருந்ததை எடுக்கச் செய்தார்
கல்வியில் பதவியில் அனைவரும் சிறக்க
நல்ல திட்டத்தை நாட்டுக் களித்தார்
திராவிடர் கழகம் தோற்றிக் களித்துப்
பட்டி தொட்டி எங்கணும் சென்றே
மூடப் பழக்கம் முடிவினை எய்தவும்
சீர்திருத்த மன்றல் சிந்தையில் கொள்ளவும்
சீர்திருத்தம் தன்னை எழுத்திலும் கொள்ளவும்
அல்லும் பகலும் அயரா துழைத்தார்
இந்தியைத் தடுக்கச் சிங்கமாய் நின்றே
சிந்தை நடுங்கும் சிறையும் நண்ணினர்
வந்த இந்தியும் நொந்தே சென்றது
எந்தத் தலைவரும் காணாச் சிறப்பைச்
சாவதன் முன்னர் கண்டார் பெரியார்
சாக்ரடீசு உருசோ சேர்ந்தா லன்ன
செம்மேனி வெண்தாடிப் பொன்மனத் தந்தையை
உலக நாடுகள் ஒன்றியம் போற்ற
உலகத் தலைவராய் உயர்ந்த பெரியார்
என்னும் பேரொளி என்றும் பொலிகவே!

———

இயற்கை ஓவியம்–
அருள்வளர் ஆமரின்

[புலவர் இரா. இளங்குமரன்]

'இல்' என்பது இடப்பொருள் உணர்த்தும் ஒருசொல்; இப்பொழுது 'வீடு' என்னும் பொருள் தரும் இச்சொல், முன்னாளில் 'ஊர்' என்னும் பொருள் தருவதாயும் இருந்தது.

சங்கச் சான்றோர் வாழ்ந்த அஞ்சில், அரிசில், கள்ளில், கிடங்கில், பொதியில், **பொதும்பில்,** பொருந்தில் என்னும் ஊர்ப்பெயர்களைக் கொண்டு இல் என்பது ஊர்ப்பெயராக இருந்ததை அறியலாம்.

இவ் வூர்களுள், 'பொதும்பில்' என்னும் ஊர் மதுரைக்கு வடபால் உள்ளது. அவ்வூர் இப்பொழுது 'பொதும்பு' என வழங்கப் பெறுகிறது. அவ் வூரில் சங்கநாளில் **பொதும்பில் கிழார், பொதும்பில் கிழார் மகனுர் வெண்கண்ணியார், பொதும்பில் புல்லாளங் கண்ணியார்** என்னும் புலவர்கள் இருந்தனர்.

பொதும்பு என்பது செறிவு என்னும் பொருள்தரும். செறிந்து கிடத்தலைப் 'பொதும்பிக் கிடத்தல்', 'பொதும்புதல்', 'பொதுமுதல்' என இப்பொழுதும் நாட்டுப்புறங்களில் வழங்குவர். பொதுளல் என்பதும் இப்பொருள் தருதல் இலக்கிய வழக்கு.(நற்.243)

செறிவு என்னும் பொருள்தரும் பொதும்பு, மரம் செடி கொடி நிரம்பிக் கிடக்கும் காட்டையும் காவையும் குறிக்கும். பொதும்பர் என்பதும் இப் பொருளே தரும். பொதும்பின் இயற்கையைச் **சீத்தலைச் சாத்தனுர்** ''வெயில் நுழைதல் அறியாது; குயில் நுழைதல் தவிராது'' என நயமாக வெளியிடுகிருர். ''வெயில்நுழை பறியாக் குயில்நுழை பொதும்பர்'' என்பது அவர் வாக்கு.

இயற்கை வளம் சிறந்த இப் பழம் பொதும்பு, இன்று வயலும் குளமும் மரமும் சோலையும் சூழும் சூழலிடையேதான் அமைந்துள்ளது. ''காடு கெடுத்து நாடாக்கிக், குளம் தொட்டு வளம் பெருக்கத்'' தொடங்கிய நாள்முதல், காடுகள் அருகிக்கொண்டு வருவதால், அப் பழங்காட்சியைப் 'பேர்' அளவில்தான் அறிந்து கொள்ள முடிகிறது. இப் பொதும்பில் வாழ்ந்தவரும், நிலக்கிழ

ராக விளங்கியவரும் ஆகிய புலவர் ஒருவரே பொதும்பில் கிழார். அவர் ஓர் இயற்கை ஓவியம் தீட்டியுள்ளார்.

ஒரு குன்றம்; அதன் சூழலெல்லாம் வேங்கைமரம்; வேங்கை மரத்தின் கீழே ஒரு பக்கம், அரிமாக்(சிங்கக்)கூட்டம். ஆண், பெண், குட்டி எல்லாம் கூடிய கூட்டம்.,

இதனை அடுத்து மற்றொரு பக்கத்தில், ஆமான்கூட்டம். ஆமான் எப்படி இருக்கும்? வீட்டு 'ஆ'வும், காட்டு மானும் கலந்தமைந்து ஒருருக் கொண்ட தோற்றம். அதன் கொம்பு பெரிது; நீண்டது; ஆனால், உள்ளே துளையுடையது ஆதலால் பொய்த்தோற்றத்தில் தான் பெரிதாகத் தெரியும்! அவ்வாமான் தன் இளங்கன்றொடும் இனிய சுற்றத்தொடும் தங்கியுள்ளது.

ஆமான் தங்கியிருக்கும் வேங்கைமரத்தின் மேல், ஒரு மந்தி தன் இளங்குட்டியொடும் இனத்தொடும் உள்ளது. அதன் தலை பஞ்சு போன்ற 'துய்'யையுடையது. அதற்கு நல்ல உறக்கம்; அந்த உறக்கத்தின் இடையே விழித்துக்கொண்டது. அதன் தாய்மை விழிப்பூட்டியது போலும்; "பால் நினைந்தூட்டும்" தாய்மை இருந்தால், தன் மடியில் சுரந்த பாலைத்தானா ஊட்டவேண்டும்? அதற்கு ஏற்ற பால் எதுவாக இருந்தாலும் அதனை ஊட்டி மகிழ்வித்துத் தானும் மகிழத்தானே செய்யும்?

மந்தியின் குட்டி மிக இளையது. தாவுதலை இன்னும் கற்றுக் கொள்ளாதது. தனக்குரிய உணவைத் தானே தேடித் தின்னவும் தெரியாதது. ஆனால், இளமைக்குரிய பிடிவாதமும், முரண்டும் நிரம்ப உடையது. இருந்தாலும் என்ன? இளமையின் பிடிவாதமும் முரண்டும் இன்பப் பொருள்கள் தாமே!

மந்தி தன் குட்டியை மெல்ல அணைத்துக்கொண்டு மரத்தில் இருந்து இறங்கியது; மெதுவாக நடந்தது; குட்டியொடு படுத்திருக்கும் ஆமானை நெருங்கிச் சென்றது. அதன் அமைந்த அசை நடை மற்றை மந்திகளுக்கு விந்தையாய் இருந்தது. நகைப்பாயும் இருந்தது. ஆதலால் அவை கூடிக் குரல் எழுப்பின; எழுந்தும் ஆர்த்தன.

இறங்கி நடந்த மந்தி அவற்றை ஏறெடுத்துப் பார்த்தது. தன் கையைத் தூக்கிக் கவித்துக் காட்டியது. 'அமைதியாக இருங்கள்' என்று அம் மந்தி காட்டிய குறிப்பை மற்றவை உணர்ந்துகொண் டன. உடனே ஒலியடங்கி அமைதியானது.

மந்தியின் பார்வை படுத்துக்கிடக்கும் ஆமானின் பருத்த மடுவின் மேல் பதிந்தது. அது நன்ருகப் பருத்து வீங்கியிருந்தது. பால் பெருகக்கட்டி வெடிப்பாக இருந்தது. மெல்லத் தன் கையை அம் மடுவில் வைத்து, அதற்கு இன்பம் உண்டாகுமாறு மெத்தெனத் தடவியது; வருடியது, ''பையப்பைய'' அமுக்கிப் பாலைக் கறந்தது.

மந்தியின் கைபட்ட அளவில், பால் பீச்சத் தொடங்கியது. கட்டிக் கிடந்த பால் முட்டிக்கிளம்பியது! அத்தீம்பாலை இளங்குட்டியின் கையில் வழிய வழியப் பொழியவிட்டது. அள்ளி அள்ளிக் குடித்தது குட்டி! குட்டி குடித்துக் குளிரும் இன்பத்திலே, மந்தி குளிர்ந்தது.

மானின் பாலை மந்தி குடிக்கவில்லையா? இளமைக்கென்றே உள்ள உணவை, முதுமை பறித்துக் கொள்வது பாவம் என்று கருதிவிட்டதோ? தாய்மைக்கு எடுத்துக்காட்டான அம் மந்தி, குட்டிக்கே ஊட்டியது. ''தனக்கென வாழாத் தனிப்பெரும்'' தாய்மை இது!

குனிந்து நடக்கும் விலங்கை எடுத்துக்காட்டி, நிமிர்ந்து நடக்கும் மாந்தருக்கு உணர்வூட்ட எண்ணினர் பொதும்பில்கிழார். அதன் விளைவால் அரும்பியதே இக் காட்சி.

அரிமாக் கூட்டம் ஒருபால்; ஆமான் கூட்டம் ஒருபால்; அரிமா ஆமானை அச்சுறுத்தவில்லை; ஆமான் அரிமாவுக்கு அஞ்சவில்லை; அச்சுறுத்துவார் உளராஞல்தானே, அச்சுறுத்தாமல்கூட அஞ்சுவார் அஞ்சி அஞ்சிச் சாவார்! அச்சம் இருந்தால் அயர்ந்த உறக்கம் ஆமானுக்கு வந்திருக்குமா?

அரிமாவா, ஆமாஞ, மந்தியா, எல்லாம் குடும்பம் குடும்பமாகவே உள்ளன. தனியே ஓர் ஆண், ஒரு பெண், ஒரு குட்டி திரியவில்லை. எல்லாம் குடும்பம்; எங்கும் குடும்பம்; சுற்றமும் சூழலுமாக அமைந்த குடும்பம்; அங்கே அலைப்பு இல்லை; அலைக்கழிவும் இல்லை. ஒன்றை ஒன்று புரிந்துகொண்டு நடக்கும் புகழ் வாழ்வு அது.

நல்ல குடும்பத்தின் இயல்பு எப்படி இருக்கும்? ஒருவர் உரிமைக்கு ஒருவர் தடையாக இரார். ஒருவர் உணர்வுக்கு மற்ருெருவர் தடையாக இரார். ஒருவர் ஆணையை மற்றவர் மதித்து நடப்பர்; ஒவ்வொருவர்க்காகவும் ஒவ்வொருவரும் வாழ்வர். மந்தி கையசைத்துக் காட்டவும் சுற்றமெல்லாம் அமைந்துவிட்டதன்ருே!

நல்ல குடும்ப வாழ்வில் திருடுதல் நடக்கலாமா? திருடுதல் நடக்கக் கூடாததுதான். ஆனல், திருட்டு நடந்தால்தானே 'கூடாது' எனலாம். ஆமான் மடியில் சுரந்துள்ள பாலோ, கட்டிக்

கிடக்கிறது. அதன் குட்டி அதன் அருகே ஒட்டிக் கிடந்தும் கட்டிக் கிடக்கும் பாலைப் பருகப் பசியின்றிக் கிடக்கிறது. பல குட்டிகள் பருகும் அளவுக்குள்ள பாலை ஒரு குட்டி என்ன செய்யும்? அதுவே குடித்து வயிற்றைப் பெருக்கி வாழ்வைக் கெடுத்துக்கொள்ள வேண்டுமா? தேவைக்கு மேல் தேங்கிக் கிடக்கும் பொருளைத் தேவைப்பட்டவர் எடுத்துக் கொள்வது திருட்டாகுமா? கொடுப் பவர்க்கும் இன்பம்; எடுப்பவர்க்கும் இன்பம்; இவ்வின்ப நிலையத்தைத் துன்பநிரயமாக்க வேண்டுமா? பொதுநலத்தின் ஆணிவேர் இஃதாகும்!

ஆமானுக்குத் தெரியாமல் பிழிந்துகொண்டது களவுதானே! அப்படியா? ஆமானுக்குத் தெரியாமல் பிழிய முடியுமா? சூடு சொரணை இன்றி மரத்துப்போனதா ஆமான்? அதன் பேரருள் பெருக்கத்தை நாம் புரிந்து கொள்ளவேண்டும்! அதற்கு இல்லா விட்டாலும், அதனைப் புனைந்து காட்டிய புலவர் பொதும்பில் கிழார்க்குப் பேரருள் உண்மையைப் புரிந்துகொள்ளவேண்டும்!

ஆமான் கண்ணைத் திறந்தால்-அசைந்தால்-மந்தி அஞ்சி ஓடி விடுமே! அஃது, அஞ்சி ஓடாவிடினும் அதன் இளங்குட்டி அஞ்சி ஓடிவிடுமே! 'அதன் பசி தீர்க்கும் பேறு எனக்கு வாய்க்காது போகுமே' எனப் பொய்யாகக் கண்ணை மூடிக்கொண்டு கிடக்கிறது. காதில் கிடந்த குண்டலத்தைக் கள்வன் கழற்றுவதை அறிந்து கொண்டும், உறங்குவதுபோல் கிடந்து, ஒரு காதில் இருந்ததைக் கழற்றியதும், உறக்கச் சடைவில் புரண்டு படுப்பதுபோல் படுத்துக் கொண்டு, மறுகாதுக் குண்டலத்தையும் கழற்றிக் கொள்ள உதவி னரே வள்ளலார்! அவ் வள்ளலார் உள்ளம் வாய்த்தது ஆமான்- அருள்வளர் ஆமான் அது!

பொதும்பில்கிழார் ஓவியம் பொலிவுமிக்கது; எண்ண எண்ண இனிப்பது. எண்ணுவார் எண்ணத்தளவு ஓங்கி உயர்வது.

> ''தடங்கோட் டாமான் மடங்கல் மாநிரைக்
> குன்ற வேங்கைக் கன்றொடு வதிந்தெனத்
> துஞ்சுபதம் பெற்ற துய்த்தலை மந்தி
> கல்லென் சுற்றம் கைகவியாக் குறுகி
> வீங்குசுரை ஞெமுங்க வாங்கித் தீம்பால்
> கல்லா வன்பறழ்க் கைந்நிறை பிழியும்.''
>
> —நற்றிணை. 57.

தடங்கோடு - பெரிய கொம்பு; மடங்கல் மாநிரை - அரிமாக் கூட்டம்; துஞ்சுபதம் - உறக்கம்; துய் - பஞ்சு; கல்லென் சுற்றம் - ஆர வாரமிக்க சுற்றம்; சுரை - மடி; பறழ் - குட்டி.

———

அப்பரடிகளும் சமண சமயமும்

[டாக்டர் சொ. சிங்காரவேலன், எம்.ஏ., பிஎச்.டி.,

அ. வ. அ. கல்லூரி, மாயூரம்]

கவிநோக்கு :

உலகின் அழகினைக் கண்டு வியந்து போற்றும் இயல்பு நம்மிடம் இல்லை; மாறாகத் துன்பங்களை நோக்கி, நொந்து கவலைப்படும் இயல்பே நம்மிடம் கால்கொண் டிருக்கின்றது. ஆனால், அழகுக் கூத்தாடும் இயற்கைச் செல்வத்தை அறிந்து, உணர்ந்து பாராட்டு இசைக்கும் பண்பு பாவலனிடத்தேயே உள்ளது. கவிஞன் உலகின் அழகுக் கூத்தைத் தன் ஒளிபடர்ந்த சொற்களால் பாட்டாக்குகின்றான். இதற்குக் காரணம் கவிஞன் பெற்றிருக்கும் கவிதைக் கண்-கலைநோக்குத்தான். நம் பார்வை மேம்போக்காக நின்று விடுகின்றது. கவிஞன் அல்லது கலைஞனின் பார்வையோ ஊடுருவிப் பாய்கிறது நம் போக்குப் புறத் தோற்றத்தில் நின்று வலியிழந்து விடுகின்றது; கவிஞனின் பார்வை அகத்தோற்றத்தில் ஆழப்பதிந்து நங்கூரம் பாய்ச்சி நிற்கின்றது. இந்த நுட்பமான பாகுபாடு ஆழ்ந்து சிந்தித்தால் தோன்றக் காணலாம்.

அழகை மட்டுமின்றி உலகத் துயரங்களையும் கவிஞனோ கலைஞனோ காணாமல் இல்லை. அவற்றையும் படம் பிடித்துக் காட்டி விடுகின்றான்; ஆனால், உலகியல் நுட்பம் உணர்ந்த நெஞ்சினின்று புறப்படுவதாகலின், அவற்றை விரும்புகின்றோம் நாம்; மேலும் மேலும் படித்து, உணர்ந்து, கனிந்து, கரைகின்றோம். "கவிஞனுடைய கண் விண்ணுக்கும் மண்ணுக்கும், மண்ணுக்கும் விண்ணுக்குமாகச் சுழல்கின்றது; சுழன்று நோக்கிக் கற்பனை வடிவங்களை உருவாக்குகின்றது. அவ் விழுமியோனுடைய எழுதுகோலால், அறியப்படாத பொருள்கள் வடிவம் பெறுகின்றன; உயிர்த் தன்மையும் எய்துகின்றன" என்று உலக நாடகப் பெருங் கவிஞராகிய சேக்ஸ்பியர் கூறுவது இங்குக் கருதத்தக்கது.[1]

---

1. "The Poet's eye, in a fine frenzy rolling, doth glance from heaven to earth, from earth to heaven; And as imagination bodies forth the forms of things unknown, the poet's pen turns them to shapes, and gives to airy notting a local habitation and a name".

சமயமும் பாட்டும் :

இத்தகைய கவிஞர்களோடு நாம் கொள்ளும் உறவு உள்ளத்தைத் திருத்துகிறது. உலகியல் துன்பங்களினின்றும், கவலைகளினின்றும் பிரித்து, உயிர்ப் பறவையை மேலே உயரப் பறக்குமாறு செய்கிறது. எங்கும் நிறைந்து விளங்கும் பேரின்பப் பெரும் பேற்றுக்கு ஆற்றுப்படுத்துகின்றது. இவ்வகையில் பாட்டும் சமயமும் ஒன்ருக நிற்றலைக் காணலாம். பாட்டு அல்லது கவிதையும் உயர் நெறி காட்டுகின்றது; சமயமும் நெறி காட்டுகிறது. பாட்டும் கனிந்த நெஞ்சைத் தன் வயமாக்குகின்றது; சமயமும் கனிந்த நெஞ்சைப் பண்படுத்துகின்றது. விழுப்பொருளை விளக்குவது பாட்டு; விழுப்பொருளோடு இணைப்பது சமயம். இவற்றின் ஒருமைப்பாடு கண்டே அறிஞர்கள், சமயத்திற்குத்தக்க கருவியாகப் பாட்டைக் கையாண்டு சிறந்துள்ளனர்.

கவிதை அனுபவம் :

'உயர்ந்த பாட்டுக்கள்' வெறும் சொல் வடிவங்கள் அல்ல; அவை சாவா இலக்கியங்கள். அப் பாட்டிலக்கியங்களில், அவற்றின் ஆசிரியர்கள் கண்டவை யாவை, பட்டறிவால் வாழ்வில் உணர்ந்தவை யாவை, அவ்வுணர்வுப் பேற்றினுல் தெளிந்தவை யாவை, உலகிற்கு அத்தெளிவினுல் விடுக்கும் உண்மைகள் யாவை என்ற அரும்பொருள்கள் அடங்கிக் கிடக்கக் காரணம்;[2] ஆதலால், விழுமிய கவிஞர்கள் வழங்கும் கவிதைகளை நுட்பமாகக் காண்டலும் சிந்தித்தலும் தேவைப்படுகின்றன. திருவாசகத்தில் தோய்ந்த வள்ளலார், '**நான்கலந்து பாடுங்கால்**' என்று கூறும்போது பாட்டை அநுபவிக்கும் பாதையைச் சுட்டுகின்ருர்.[3] ஆம்; நாம் வேறு, பாட்டு வேருக இருக்கும்வரை பாட்டின் உட்பொருளை நம்மால் அணுகவே இயலாது. பாட்டோடு பாட்டாக நாம் கலந்து, ஒன்ருகக் கரைந்து, இன்புறவேண்டும். 'நவில்தொறும் நூல் நயம்போல்' என்று திருவள்ளுவர் கூறுவதும் இந்த அடிப்படையில்தான்.[4] '**நவிலுதல்**' என்பது சிந்தையும் நாவும் சேரப்படைக்கும்

---

2. Literature is a vital record of what men have seen in life, what they have experienced of it, what they have thought and felt about those aspects of it which have the most immediate and enduring interest for all of us"—W. H. Hudson.

3. ஆளுடைய அடிகள் அருள்மாலை—பா. 7 (திருவருட் பாத்திரட்டு.)

4. திருக்குறள் 783 (நட்பு) (சமாசப்பதிப்பு 1950.)

தொழிலாகக் கொள்ளுதலே தக்கது. ஆயின் கவிதை ஒன்றிற் காணும் ஒவ்வோர் சொல்லும் ஒவ்வொரு உலகம் எனல் மிகை யன்று.

அப்பர் சமணச் சார்பு :

தமிழிலக்கிய வரலாற்றில் சிவநெறிச் செம்மலாக விளங்கிய அப்பரடிகட்கு ஒரு தனி இடம் உண்டு. பழுத்த தமிழ்ப்புலவராக விளங்கியவர், இவ்வருளாளர். 'தமிழாளியார்' '**இன் தமிழுக்கு மன்**' '**வாக்கின் பெருவிறல் மன்னர்**' '**கோதில் மொழிக் கொற்றவனுர்**' '**தமிழ் மொழித் தலைவர்**' என்பன முதலிய சேக்கிழாரின் தொடர்கள் புனைந் துரையன்றி மெய்யுரைகளே என்பதை, இவர்தம் அரும் பெரும் பாட்டுகள் காட்டி நிற்கின்றன.[5] தமிழ் இலக்கியக் கருத்துவளம், இலக்கண நுட்பம், புதுப் படைப்பு நலம், கற்பனை மாண்பு, எல்லா வற்றிற்கும் மேலாகக் கனிந்த நெஞ்சுடன் சமுதாயத்திற்குத் தொண்டு நெறி காட்டும் தூய போக்கு ஆகிய ஒவ்வொன்றும் அடிகளை இனம் பிரித்துக் காட்டும் தனிச் சிறப்புக்களே. இவற்றுள், சமணத் தொடர்பு பற்றிச் சிந்தித்து நலம் காணலும் காட்டலுமே இக் கட்டுரையாசிரியரின் நோக்கு. அதுபற்றி ஆய்தற்குத் தொடர் பான சில விளக்கங்களையும், '**ஒப்பக் காண்டல்**' என்னும் முறை பற்றி, மொழிந்திடலும் தவருகாது.

தமிழகச் சமயநிலை :

அப்பரடிகள் திருவாமூரில் 'தெய்வநெறிச்சிவம் பெருக்கும் திரு ஆம் ஊர்' என்று சேக்கிழார் சிறப்பிக்கும் சிற்றூரில்,[6] சிவ நெறிப் பாங்குடைய குறுக்கையர் குடி என்னும் வேளாளக் குடும் பத்தில் பிறந்த இளைய செம்மல்.

'உழுது உண்ணும் வேளாண்குடி'யிற் பிறந்த மருள் நீக்கி யார் திலகவதியார்க்குச் சில ஆண்டுகள் இளையவரே. தந்தை தாயார் மறைந்தனர்; தமக்கையார்க்கு என்று உறுதி செய்த கலிப்பகை நாயனுரும் களங்கண்டு போரிட்டுக் கண்ணுதலோன் கழல் நாடினுர். இந் நிலையில், துன்பம் உள்ளத்தின் அடிநிலையி லேயே தோன்றி மலர்ந்து அடிகள் இளமைப் பருவத்தில் பெருந் தாக்குதல் புரிந்துவிடக் காண்கிரேம். அப்போது அடிகள் அடிக

5. திருத்தொண்டர் புராணம்—229, 1415, 2172, 2501 பாடல் களை நோக்குக.

6. திருத்தொண்டர் புராணம்—1282.

ளாராக இருந்தாரல்லர்; எளிய இளைஞராக, துன்ப இன்பங்கட்கு இணங்கக்கூடிய செவ்வியினராகவே இருந்தனர். ஆனால், கல்வி யறிவு நிரம்பியவராக இருந்தனர். கற்ற கல்வியறிவினால் அவர்க்கு அமைதி இல்லாமற் போயிற்று. குடும்பச் சூழ்நிலையும் அவர்க்கு அமைதி தருவதாக இல்லை. வீட்டுச் சூழ்நிலைதான் இப்படி என்றால் நாட்டுச் சூழ்நிலையும் இப்படியே மாறி நின்றது. ஆட்சி ஏற்ற பல்லவப் பெருமன்னன் சமண சமயம் சார்ந்தவனாக இருந்தான். தமிழகத்தின் பழம்பெரு நெறியாம் சிவநெறி தன் செல்வாக்கை இழந்த நிலை. அரசியல் ஆதரவு புறச் சமயத்திற்கு இருந்ததே தவிர தமிழ் அகச் சமயமாகிய சிவநெறிக்கு இல்லை.

மருள் நீக்கியாருடைய சிவநெறிக் குடும்பம் மட்டுமன்று; நாட்டில் சிவநெறி சார்ந்த குடும்பங்கள் அவ்வளவாகச் சிறந்த சூழ்நிலையில் இருக்கவியலாத நிலை. சமண சமயத் தத்துவங்களை விளக்கும் அரசு கட்டில்; அதனைச் சார்ந்த சமணப் பள்ளிகளின் விளக்கமும் எழுச்சியும்; மருள் நீக்கியாருடைய இளைய உள்ளத்தில் இவையனைத்தும் படிகின்றன. அகத்தே அமைதி இல்லாத அவர்க்குப் புறத்தே காணும் நிலையும் அமைதி தருவதாக இல்லை.

அடிகளார் உள்ளத்து வீசிய புயல்:

பெற்றோர் மறைவிற்குப் பின்னர், அன்புத் தமக்கையார் 'மனைத்தவம்' புரிந்து இருந்தார்; அக் காலத்தே மருள் நீக்கியார் வாழ்வு எவ்வண்ணம் இருந்தது? சேக்கிழார் பாட்டுக்களிலின்று அறியப் பெறுவன இவை;[7] அறங்கள் புரிந்தார்; உலகில் புகழ் விளங்கச் செல்வத்தைப் பயன்படுத்துவாராய் அறச் சாலைகளும், தண்ணீர்ப் பந்தல்களும் அமைத்தார். சோலைகள் வளர்த்தார். குளங்கள் அகழ்ந்தார். நேர்மையினின்றும் வழுவாமல் மேவியவர் களுக்கு வேண்டுவனவற்றை உவந்தளித்தார். விருந்து ஓம்பினார். நாவலர்களுக்கு வளம் பெருக நல்கினார். ஈகைத் தொழிலில் தலை நின்றார்.

இவற்றால் மருள் நீக்கியாருடைய இளைய நெஞ்சில் வீசிய புயலும், அது தவிர அமைதி வேண்டி அவர் ஆற்றிய செயல்களும் இனிது புலப்படும். இனி இவ்வாறு இவர் ஆற்றிய செயல்களாகச் சேக்கிழார் கூறுவனவற்றைச் சிறிது கூர்ந்து நோக்குவோம்.

மனை வாழ்வு உண்டா?

திருமணம் செய்து கொண்டமை பற்றியோ மனைவி மக்க ளுடன் மனையறம் நிகழ்த்தியது குறித்தோ இக் குறிப்புக்களினின்

7. *திருத்தொண்டர் புராணம், 1306, 1307 பாடல்கள்.*

றும் வெளிப்படையாக உணரத்தக்கது இல்லை; என்றாலும் அடிகளின் மனையற மாண்பு காணலாம். பெருஞ்செல்வத்தை வறியார்க்கு வாரி வழங்கும் ஈகைத் தொழிலில் தலைப்பட்டார் அடிகள். சமுதாயப் பணிகளில் ஈடுபட்டார். சோலைகள் வளர்த்தும், குளங்கள் தோண்டியும் மக்கட்பணி நலம் கொண்டார். அறச் சாலையும், தண்ணீர்ப் பந்தலும் அமைத்து வயிற்றுக்குச் சோறும், தாகத்திற்கு நீரும் வழங்கினர். ஏழை மக்களிடம் இரக்கமும் கருணையும் கொண்டு இவ்வாறு செய்த அடிகளாரின் திருவுள் ளத்தில், இதுவே இறையருட்பணி என்னும் திருக்குறிப்புத் தோன்றிற்றுதல் வேண்டும். இதனாலேயே, பின்னர்த் தம் தேவாரப் பாக்களில் இதனைப் பின்வருமாறு சுட்டிப் பேரின்பம அடைவாராயினர்:

''தயா மூல தன்ம வழி எனக்கு நல்கி
மனம் திருத்தும் மழபாடி வயிரத்தூணே''[8]

''தயா மூல தன்மம் என்னும் தத்துவத்தின்
வழிநின்று தாழ்ந்தோர்க் கெல்லாம்
நலங் கொடுக்கும் நம்பியை''[9]

தயா - அன்பு; தன்மம் - அறம், அன்பும் அன்பின் முதற்காரண மாகிய அறமும் இவ்வாறு அடிகளாரால் விதந்தெடுத்துப் பேசப் பெற்றன; 'தத்துவம்', 'வழி' என்னும் இரு சொற்களால், இந்த அன்பும் அறனுமே இனிய தத்துவ நெறி என்றும் புலப்படுத்தியுள்ளார்.

''அன்பும் அறனு முடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது''

என்ற குறட்பாவில், இவ் விரண்டுமே இல்லற வாழ்க்கையின் பண்பும் பயனும் ஆவன என்று திருவள்ளுவரும் குறித்தமை ஓரத்தக்கது[10] இவ்வாறு இரங்கிய இதயம் கொண்ட அடிகளார் 'விருந்தோம்பிய விழுப்பம்' ஒன்றே இவரது மனை வாழ்விற்குச் சான்றாகும் என்று கூறலாம்.

''உயர்ந்தேன் மனை வாழ்க்கையும்
ஒண் பொருளும்''[11]

---

8. திருநாவுக்கரசர் தேவாரம் (சமாசப் பதிப்பு 1941—6—20—6.)

9. மேற்படி 6—40—6.

10. திருக்குறள்—45.

11. திருநாவுக்கரசர் தேவாரம் (சமாசப்பதிப்பு 1941, 4—1—7.)

"வலித்தேன் மனை வாழ்க்கை
மகிழ்ந்தடியேன்"[12]

என்றும் தம்முடைய முதற் பதிகத்திலேயே தம்முடைய மனை வாழ்க்கையை அடிகளார் சுட்டுதல் காணத்தரும். இவ்வாறு முறையான மனைவாழ்வு ஒன்று அடிகளார்க்கு இருந்தது என்று எண்ணுவது தவருகாது. 'மனை வாழ்க்கையினின்றும் தாம் விடுதலை பெற்ற' மன உணர்வையே மறுமாற்றம் உரைக்கும் திருப்பதிகத்தில், 'வாராண்ட கொங்கையர்சேர் மனையிற் சேரோம்' என்று அடிகள் குறித்தருளினர் எனக் கூறலாம்.[13]

மனைவி, மக்கள், அம் மக்கட்கு மக்கள் ஆகியோரைக் காக்கும் வாழ்க்கைச் சிக்கலுள் அழுந்திச் 'சைவத்திறம் பொருந்திலேன்' 'தவநெறி ஓரேன்' என்று வருந்தும் பாடற்பகுதியும் கருதத் தக்கது.[14] 'திருமணத்தாற் கொண்ட மனைவி' என்ற பொருளில் 'மணந்த தாரம்' என்று குறிப்பிடுதல் நோக்கத்தக்கது. இக் குறிப்புக் களால் அறியப்பெறும் மனை வாழ்க்கை பற்றிச் சேக்கிழார் விளக்கமாகக் கூருமற் போயின காரணம், அவர்க்குப் போதிய விளக்கக் குறிப்புக்கள் கிடையாமற் போயினமையே என்றும் கருதலாம். சேக்கிழார் பல விவரங்களை விளக்கமாக எடுத்துரைத்தும், சில வற்றை மிக நுட்பமாகக் குறித்துணரும்படி உரைத்தருளும் இயல்பினர் என்பதற்குப் பெரிய புராணத்தினின்றும் பல சான்றுகள் காட்டலாம்.

துன்பச் சூழ்நிலை :

இவ்வாறு தம்முடைய மனத்துன்பம் தவிர மருள் நீக்கியார் செய்த பணிகள் பல, தம்முடைய தாய் தந்தையர், மைத்துனர் மறைவுகள் அவர்க்கு யாக்கை நிலையாத இயல்பினை எடுத்துணர்த்தின. 'நில்லாத உலகியல்பு கண்டு தெளிந்து நிலை உடைய பொருளை அறிய முயல வேண்டும்' என்ற உறுதியான எண்ணம் அடிகட்கு உளதாயிற்று. சிவநெறியில் அந்த அறிவு கிட்டும் என்று அந்த இளைய மனம் கருதவில்லை; கொல்லாமை, வாய்மை, அன்பு, அறம் முதலிய கொள்கைகளை மிக வேகமாகக் கூறி வந்த சமண சமயக் கொள்கைகள் அவரை ஈர்த்தன. துன்பச் சூழ்நிலை துரத்தியது.

(தொடரும்)

12. மேற்படி 4—1—8.
13. ,, 6 98—3.
14. ,, 4—79—2.

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்கவேண்டாம்"

[தி. இராசமாணிக்கம், பி. ஏ, பி. காம், விசாரத், திருநெல்வேலி]

உரன் என்னும் தோட்டியான் ஓர் ஐந்தும் காப்பாரே எந்தச் சூழ்நிலையிலும் இறைவனிடத்தில் மனம் ஒன்றி ஈடுபாடு கொள்ள இயலும். பொதுமக்கள் தம் வாழ்விற்குத் தேவையானவற்றைப் பெறவோ அன்றித் தம் வாழ்வை வளமுள்ளதாக்கவோ எந்நேரமும் சிந்தித்த வண்ணம் இருக்கின்றனர். அதற்கான முழு முயற்சியிலும் ஈடுபடுகின்றனர். இதுவும் அன்றி மனித மனம் குடும்பக் கவலை போன்ற பல்வேறு தொல்லைகளால் அல்லல் உற்று அவதிப் படுகின்றது. இத்தகையோருக்கு இறைவனைப் பற்றிய எண்ணத்தை உண்டாக்க வேண்டும்; அமைதியான சூழ்நிலையில் இறைவழிபாடு செய்ய வேண்டும்; மனத்தில் உள்ள சுமை நீங்கி அமைதிபெற வேண்டும் என்ற பெருநோக்கத்தோடு எழுந்தவையே கோயில்கள். இதனுல்தான் தமிழ் மூதாட்டியும் "ஆலயந் தொழுவது சாலவும் நன்று" என்று கூறிப்போந்தார்.

தமிழகத்தில் கோயில்கள் ஆண்டவனை வழிபடும் தூய இடங்களாக மட்டும் இருக்கவில்லை. தாராசுரம் ஐராவதேஸ்வரர் ஆலயத்தில் நாயன்மார்களின் வாழ்க்கை கல்லிலே சித்திரிக்கப்பட்டுள்ளது திருவிடைவாயில் புண்ணிய நாதேசுவரர் கோயிலில் ஞானசம்பந்தப் பெருமானின் பதிகம் ஒன்று பொறிக்கப்பட்டுள்ளது. கோயில்களில் சமயத்தொண்டர்களின் வாழ்க்கை வரலாறுகளும் அவர்களின் தெய்வீகப் பாடல்களும் இடம் பெற்றதோடு திருப்பதிகங்களும் பாடப்பெற்று வந்தன. திருவீழிமிழலை வீழிநாதப் பெருமான் திருக்கோயிலில் மாமன்னன் இராசராச சோழனின் 27ஆம் ஆண்டிலிருந்து திருப்பதிகம் பாடப்பெற்று வந்தது. திருமணச்சேரி உத்வாகநாதர் திருக்கோயிலில் பங்குனி உத்திரத்திற்கு வரும் 1000 அடியார்களுக்கு அமுது படைக்க முதல் இராசராச சோழனின் 28ஆம் ஆண்டில் நிலம் நிவந்தமாக அளிக்கப்பட்டது. இவ்வாறு மக்களிடையே சமய அறிவைப் பரப்பி நல்வாழ்வு நடாத்த ஆவன செய்வதில் திருக்கோயில்கள் பெரும்பங்கு தாங்கிவந்தன.

வீரராசேந்திர சோழன் காலத்தில் திருமுக்கூடலில் மாதவன் என்பான் மறைகள் முதலியவற்றைக் கற்பிக்கக் கலாசாலையும், மாணவர்கள் தங்குவதற்கு விடுதியும், 15 படுக்கைகள் கொண்ட

மருத்துவமனையும் ஏற்படுத்தினன். இவை அங்குள்ள பெருமாள் கோயில் ஆளுமையில் இருந்தன. மேலும் அங்குச் செயல்முறைகள் செம்மையாக நடைபெற ஆசிரியரும், மருத்துவரும், நோயாளிகளைக் கவனிக்கப் பெண்களும் கோயிலின் மேற்பார்வையில் பணிபுரிந்து வந்தனர் இதினின்றும் கோயில்கள் கல்விக் கூடங்களாகவும், மருத்துவமனைகளாகவும் இலங்கின எனத் தெரிகிறது.

சிவனடியார்களாகிய நாயன்மார்கள் பல்வேறு கோயில்களில் எழுந்தருளிய காடுடைய சுடலைப்பொடி பூசி உள்ளங்கவர் கள்வனைப் போற்றி, பத்தி மணம் கமழும் பாடல்களைப் பாடியுள்ளனர். வைணவப் பெரியோர்களாகிய ஆழ்வார்களும், மூவுலகும் உண்டு உமிழ்ந்தோனை உள்ளங்கரைக்கும் பாசுரங்களால் மங்களாசாசனம் செய்துள்ளார்கள். பத்திப் பாடல்களிலே இணையற்ற மொழி எனத் தமிழ்மொழி ஏற்றம் பெற சைவத்திருமுறைகள் பன்னிரண்டும், தமிழ் வேதம் எனப்படும் நாலாயிரத்திவ்யப் பிரபந்தங்களும் மற்றும் திருப்புகழ், திருவருட்பா போன்றவையும் தோன்றின. ‘கோயில்கள் இல்லையேல் பத்தி இலக்கியம் இல்லை’ என்று கூறின் அது சற்றும் மிகையாகாது.

சித்தன்ன வாசல் குகைக்கோயில் தமிழ்நாட்டின் அஜந்தா வாகக் கருதப்படுகிறது. முன் மண்டபக்கரையில் சமணசமயச் சார்பினை உடைய தாமரைக்குளமும் தூண்களில் நடன மாதர் களின் வடிவங்களும் சித்திரிக்கப்பட்டுள்ளன. ஜீன காஞ்சி எனப் படும் திருப்பருத்திக் குன்றத்தில் வர்த்தமானர் கோயிலில் 3 சமண ஆச்சாரியர்களின் வாழ்க்கை ஓவியமாகத் தீட்டப்பட்டுள்ளது. தஞ்சைப் பெரிய கோயிலில் சோழர் மற்றும் நாயக்கர் கால ஓவியங்கள் காணப்படுகின்றன. இவ்வாறு திருக்கோயில்கள் ஓவியக்கலைக்கு ஆக்கம் அளித்துவந்தன. திருந்துதேவன்குடியில் உள்ள அருமருதுடையார் முன்பு வீணை வாசிக்க விக்கிரமசோழ னின் 6ஆம் ஆண்டில் நிலம் தனிப்பட்ட ஒருவரால் தானம் அளிக்கப்பட்டது. மேலும் திருப்பதிகம் பாட 48 பேர்களுக்கும், நடனம் ஆட 400 பெண்களுக்கும் நிலம் முதலியவற்றைத் தமிழ் நாட்டின் பொற்காலச் சிற்பி இராசராச சோழன் தனது 29ஆம் ஆண்டு ஆட்சியில் அளித்துள்ளான். இதினின்றும் கோயில்கள் நடனம் இசை போன்ற நுண் கலைகளுக்கு அளித்த ஊக்கத்தை யறியலாம். கோயில்கள் சிற்பக்கலையை வளர்த்தமைக்கு இன்று தமிழகத்தில் உள்ள ஆயிரக்கணக்கான கோயில்களே சான்றாக உள்ளன. காவிரி தந்த கலைச்செல்வன் கட்டிய தஞ்சைப் பெரிய கோயில் ஒன்றே போதுமானதன்றோ?

முதலாம் பரமேசுவரவர்மனின் கூரம் செப்பேட்டினின்றும் தமிழ்நாட்டின் முதற் கற்றளியான வித்யவிநோதபல்லவ பரமேசுவர கிருகம் என்ற சிவன் கோயிலில் பாரதச் சொற்பொழிவு நடத்த நிவந்தம் அளித்தமை தெரிகிறது. சந்திரலேகை சதுர்வேதி மங்கலம் எனப்படும் செந்தலையேசுவரர் கோயிலில் பாரதச் சொற்பொழிவு நடத்தப்பட்டது. இதிகாச புராணங்களில் குறிப்பாகப் பாரதம் பற்றிய சொற்பொழிவுகள் நடத்தியதன் நோக்கம் மாபாரதக் கதையிலே வரும் வீமன், அருச்சுனன், கர்ணன் போன்ற மாவீரர்களைப் போன்று மக்கள் வீரர்களாகத் திகழவேண்டும் என்பதே.

"கெடுக சிந்தை கடிதிவள் துணிவே
மூதின் மகளிர் ஆதல் தகுமே"

எனப்படும் தமிழ் மகள்,

சிதைந்து வேருகிய
படுமகன் கிடக்கை காணூஉ
ஈன்ற பொழுதினும் பெரிதுவந் தனளே"

அல்லளோ! மக்களை வீரர்களாக்கும் பணியிலும் கோயில்கள் தம் பங்கை ஆற்றின.

ஆரகூர் காமேசுவரர் கோயிலில் சுந்தரபாண்டியதேவன் காலத்தில் பூசனை உரிமை பெற்ற ஒரு பெண் கோயில் அணிகலங்களைக் களவாடியமைக்காகச் சிறைப்படுத்தப்பட்டாள். அவளை அலுவலர்கள் கோயில் மண்டபத்தில் விசாரணை செய்து பூசனை செய்யும் உரிமையை ஏனைய பூசகர்களுக்குக் கொடுத்து விடுகின்றனர். இவ்வாறு கோயில்கள் அறம்கூறும் அவைகளாகச் செயல்பட்டு வந்தன. காவேரிப்பாக்கத்தில் உள்ள வரதராசப் பெருமாள் கோயிலில் திருமுறைகண்ட சோழனும் இராசராச சோழனின் 25ஆம் ஆண்டில் ஏரிவாரியப் பெருமக்கள் காமகோட்டம் என்ற மண்டபத்தில் கூடியதாகத் தெரிகிறது. கிராம சபையின் பல்வேறு குழுக்களான வாரியப் பெருமக்கள் கோயிலில் கூடிப் பல்வேறு நடைமுறைகளை விவாதித்தனர். எனவே கோயில்கள் கருத்தரங்கு நடைபெறும் இடங்களாகவும் திகழ்ந்தன.

திருவிடைமருதூர் மகாலிங்கப் பெருமான் திருக்கோயிற்கு நாடோறும் மண்பாண்டம் அளிக்க விக்கிரமசோழனின் மூன்றாம் ஆண்டில் பணம் வழங்கப்பட்டது. இவ்வாறு கோயில்கள் சிறு

கைத்தொழிலாளர்களுக்கு உதவின. கோயிலில் திருமுறை பாடவும், நடனம் ஆடவும் ஏற்பாடு இருந்து வந்தது. இதுவன்றித் திருவலகிடுவோர், திருமெழுக்கிடுவோர் மற்றும் திருப்பள்ளித் தாமம் பறிப்போர் ஆகியோருக்கு நிலம் அளித்ததாகத் திருப்பராய்த் துறை ஆதிமூலேசுவரர் கோயிற் கல்வெட்டு தெரிவிக்கிறது. மேலும் அன்றுடத் திருமஞ்சனத்திற்கு 108 குடம் தண்ணீர் வழங்க நிலம் தானம் செய்யப்பட்டதாகத் திருவிசலூர் சிவயோக நாதர் கோயில் கல்வெட்டு கூறுகிறது. சிற்பக்கலே, ஓவியக்கலே போன்றவை கோயில்களால் வளர்ச்சி அடைந்தன. மற்றும் செங்கல்லால் கட்டப்பெற்ற பற்பல கோயில்கள் கற்றளிகளாக மாற்றப்பட்டன. இதுவும் அன்றிப் பழுதடைந்த கோயில்கள் அவ்வப்போது பழுதுபார்த்துச் செப்பனிடப்பட்டன. இவ்வாறு கோயில்கள் பலவழிகளில் மக்களுக்கு வேலேவாய்ப்பு அளித்ததன் மூலம் அவர்கள் தங்கள் வாழ்வை இனிது நடாத்த உறுதுணேயாக இருந்துவந்தன.

இந் நாளேப்போல் அற்றை நாளில் திரைப்படம் போன்ற பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் இல்லே. தஞ்சைப் பெரிய கோயிலில் இராசராசேசுவரம் என்னும் நாடகத்தை வைகாசி விழாவில் நடிக்கும் நடிகர்களுக்கு அன்றுடம் நெல் படி அளிக்கப்பட்டது. இது கங்கையும் கடாரமும் கொண்ட முதல் இராசேந்திர சோழ னின் 6ஆம் கல்வெட்டினின்றும் தெரிய வருகிறது. வேதாரண் யம் வேதாரண்யேசுவரர் கோயில் திருவிக்கிரமசந்தி என்னும் இரு விழாக்கள் நடத்த மூன்றும் இராசேந்திர சோழனின் 16ஆம் ஆண்டில் நிலம் நிவந்தமாக அளிக்கப்பட்டது. மன்னர்கள் தங்கள் பெயரிலோ அல்லது தம் முன்னேர்கள் பெயரிலோ விழாக்கள் நடத்தத் தானம் அளித்துள்ளார்கள். விழாக்களும், நாடகங்களும் கோயில்களிலே நடைபெற்றமையால், அவை மக்களுக்குப் பொழுதுபோக்கும் இடமாகவும் பயன்பட்டு வந்தன.

மக்களுடைய வளர்ச்சியில் மட்டும் கோயில்கள் தங்களது பங்கை ஆற்றியதுடன் நிற்கவில்லே. இடர்நிலேக் காலங்களில் எதிரிகளிடமிருந்து தப்பப் புகலிடமாகவும் அவை இருந்தன. கோயில் ஊழியர்களில் வீரமுட்டி என்ற வீரர்கள் இருந்தனர். திருவில்லிபுத்தூர் வடபெருங் கோயிலுடையான் கோயில் திருவாயில் குறிப்பிட்ட ஊர்களில் உள்ளவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் புகலிடமாக இருந்தது. மதுரையும் ஈழமும் கொண்ட கோப்பரகேசரி முதற்பராந்தக சோழனின் 38ஆம் ஆண்டில் திருக்குடமூக்கு சபைக்கு 38,000 கழஞ்சு பொன் தண்டம் விதிக்கப் பட்டது. சபையால் தண்டம் செலுத்த இயலவில்லே. சபைக்குச்

சொந்தமான நிலத்தைத் திருக்கீழ்கோட்டத்துப் பரமநாதர் கோயில் 500 கழஞ்சு பொன்னுக்கு வாங்கி, ஒரு பகுதி, தண்டத் தைச் செலுத்தியுள்ளது. இதைக் கண்டராதித்திய சோழனின் 3ஆம் ஆண்டு கல்வெட்டு தெரிவிக்கிறது. ஓமாம் புலியூரில் வாழ்ந்த பிராமணர்கள் சிலர் குத்தகைதார்களுக்குப் பொறுப் பேற்றனர். குத்தகைதார்கள் குத்தகை செலுத்தாது ஊரைவிட்டு ஓடிவிட்டனர். எனவே அதன் பொறுப்பைப் பிராமணர்கள் ஏற்க நேரிட்டது. தங்கள் நிலத்தை விற்பனை செய்வதின் மூலம் குத்தகையைச் செலுத்த அவர்கள் செய்த முயற்சி பலன் அளிக்க வில்லை. இந் நிலையில் வியாக்கரபுரீசுவரர் திருக்கோயில் ஆட்சியாளர் கள் அந்த நிலத்தை வாங்கிக் குத்தகை செலுத்தி விடுகின்றனர். இவ்வாறு மக்கள் இன்னல் உற்ற காலங்களில் அவர்களுக்கு உற்ற துணைவனாகத் துயர்துடைக்கும் பணியினைக் கோயில்கள் மேற்கொண்டன.

மூன்றும் குலோத்துங்க சோழனின் 18ஆம் ஆண்டில் சீராளப் பிள்ளையாரை ஊர்வலமாக எடுத்துவரப் பாதை அமைத்தமைக்கு நிலம் தானமாக வழங்கப்பட்டது. இச் செய்தியைத் திருச்செங் காட்டங்குடி உத்தரபதீசுவரர் கோயில் கல்வெட்டு கூறுகிறது. திருநெடுங்குளத்திற்கு மாசி மற்றும் சித்திரை திருவிழாக்களுக்கு வரும் 500 சிவயோகிகளுக்கு அமுது அளிக்கத் தனிப்பட்ட ஒருவர் நிலம் தானம் அளித்துள்ளார். முதல் இராசராச சோழனின் 9ஆம் ஆண்டுக் கல்வெட்டினின்றும் இது தெரியவருகிறது. நிலம் வழங்கியமைக்குச் சான்றுகள் கோயில்களிலேயே கல்லில் பொறித் துள்ளார்கள். அஃதாவது கோயில்களே இக் காலத்தில் உள்ள ஆவணப் பதிவுஅலுவலகம் போன்று பணி ஆற்றிவந்தன.

இவ்வாறு கோயில்கள் மக்களின் வாழ்க்கையில் இரண்டறக் கலந்து நாகரிக வளர்ச்சியில் தலையாய பங்கைத் தாங்கிவந்தன. இன்றைய மக்கள் நலம் நாடும், மக்கள் ஆட்சியின் முன்னோடியாகக் கோயில்கள் திகழ்ந்ததாகக் கருதப்படுகிறது. எனவேதான் அன்றைய நாகரிகத்தைக் கோயில் நாகரிகம் என்று அறிஞர்கள் அழைக்கிறார்கள். எவ்வாறு புராதன கிரேக்க நாட்டில் ஏதன்சு, பார்ட்டா ஆகிய நகரங்கள் நாகரிகத்தின் மையமாக இருந்தனவோ, அவ்வாறே தமிழகத்தில் மக்கள் நாகரிகத்தின் உறைவிடமாகக் கோயில்கள் திகழ்ந்தன. கோயில் இன்றேல் நாகரிகம் இல்லை. மக்கள் வாழ்வு காட்டுமிராண்டி வாழ்வாகத்தான் இருந்திருக்கும். திருநாவுக்கரசு நாயனாரும் இது பற்றியே,

> "திருக்கோயில் இல்லாத திருவில் ஊரும்...
> ஊரல்ல அடவி காடே"

என்று அருளிச் செய்துள்ளார். "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்றால் ஆண்டவனைத் தொழத் தூய இடமில்லை. எனவே அங்குக் குடியிருக்க வேண்டாம் என்ற கருத்தில் மட்டும் கூறப்பட்டதாகத் தெரியவில்லை. கோயில் இல்லை என்றால் நாகரிகம் இல்லை. நாகரிக வளர்ச்சிக்கே இடமில்லை. மக்கள் வாழ்க்கையே மலர இயலாது. எனவே, அந்த ஊரில் குடியிருப்பதில் பயன் ஏதும் இல்லை—என்ற உயர்ந்த கருத்துதான் அடங்கியுள்ளதாக எண்ணவேண்டியுள்ளது.

தேளாது கிடைத்த நன்கொடை!

சென்னை, தம்புசெட்டித் தெருவிலுள்ள முச்சந்தி அம்மன் கோயிலுக்கு வழிபாட்டிற்குச் சென்றிருந்தேன். வழிபாடு முடிந்தது. அருட்டிரு துரை குருக்கள் பூ, பழம் முதலிய வற்றை வழங்கினர். பின் ஒரு வெள்ளை உறையை நீட்டினர். ஏதோ குங்குமம், திருநீறு இருக்குமோ என்று திறந்தேன். உள்ளே முழு நூறு ரூபாத்தாள் இருந்தது!

'எதற்கு?' என்று குருக்களிடம் கேட்டேன்.

மறைமலையடிகள் நூலக வளர்ச்சிக்கு என்னுலான உதவி' என்றார் அவர்.

நான் பெருவியப் புற்றேன். நூலகத்தை நன்கு பயன் படுத்திப் பயனடைந்தவர்களிடம் நன்கொடைகேட்டுக் கடிதம் எழுதிப் பலரிடமிருந்து பதில்வராத நிலை.

குருக்களும் அவ்வப்போது இலக்கிய, சமயத்துறை ஐயங் களைப் போக்கிக்கொள்ள நூலகத்திற்கு வருவதுண்டு. நல்ல தமிழார்வமுடையவர். தாமே விரும்பிக் கோயிலில் தமிழில் அருச்சனை செய்துவருபவர். சித்தாந்தப் பேரறிஞர்களான திரு. க. வச்சிரவேலு முதலியார், திரு. அருணை வடிவேலு முதலியார் ஆகியோரிடம் தமிழும் சமயமும் பயின்றவர்.

வசதி படைத்தவர்கள் பலரிருக்க அவரிடம் நூலக வளர்ச்சிக்கு நிதி திரட்டுவது பற்றி நான் பேசியதே இல்லை. இந் நிலையில் இவர் தாமாக முன்வந்து ரூ. 100/= கொடுத்தது எல்லையில்லா மகிழ்ச்சியை அளித்தது.

வாழ்க அவர்தம் அருளுள்ளம்.

—நூலகர்

மறைமலையடிகள் நூல்நிலையம்.

உலகத் தமிழ் மாநாட்டை யொட்டி ஆற்றவேண்டிய உயரிய பணிகளில் ஒன்று

[புலவர் பொன். முனியப்பன், கூவலூர்,

தமிழ் நாட்டுத் தொல்லியல் துறையினர் நடத்திய கல்வெட்டுப் பயிற்சியில் சான்றிதழ் பெற்றவர்]

'அறிவு நினைவு அமையா வாழ்க்கை குறியும் திருவும் கூடா வாழ்க்கை' என்பது கொங்கு நாட்டில் வழங்கும் ஒரு சொல் மந்திரம். (பேச்சு வழக்கில் இது 'சொலவாந்திரம்' எனப்படுகிறது)

அறிவோடு முன்னைய வரலாறுகிய நினைவும் கொண்டு ஒருவன் தன் வாழ்க்கையை அமைத்துக்கொள்வானானால், அவன் வாழ்க்கை குறிக்கோள் உடையதாயும் செல்வம் உடையதாயும் சிறந்து விளங்கும் என்பது இச்சொல் மந்திரத்தின் பொருளாகும்.

ஒருவனுடைய அறிவு வளர்ச்சி முன்னோர் கண்ட அறிவினின்றும் படிப்படியே மேலெழ வேண்டுமென்பதும், அதற்கு அறிவோடு கூடிய வரலாற்று நினைவு அமைய வேண்டுமென்பதும் யாவரும் அறிந்தனவே.

மறைந்து கிடக்கும் வரலாற்று வாய்மை ஒன்றை, நிறைபணியால் வெளிப்படுத்த, நடைபெறவிருக்கும் உலகத் தமிழ் மாநாடு உடன் முயற்சி மேற்கொள்ள வேண்டி இவ்வுரை இங்கு இயம்பப் படுகின்றது.

வரும் சூன் திங்களில் (1980) மதுரை மாநகரில் ஐந்தாவது உலகத் தமிழ் மாநாடு நடைபெறவுள்ளது. இம்மதுரைக்கு அருகில் 'கண்டம நாயக்கன் பட்டி' என்னும் சிற்றூர்ப் பகுதி இருக்கிறது.

இப் பகுதியில் உள்ள காடுகளிலும் மலைகளிலும் பளியர் என்னும் இனத்தவர் வாழ்கின்றனர். இப் பளியர்கள் அக் காட்டுப் பகுதியில் பழைய பாண்டிய மன்னர்களின் அரண்மனைகளும், கோட்டைகளும் அழிபாடுற்றுக் கிடக்கின்றன என்றும், கண்ணகியின் வரலாற்றோடு தொடர்புடைய சில செய்திகளை அவர்கள் இன்றும் செவிவழி மரபாகச் செப்பி வருகின்றனர் என்றும், இவ்விடத்தில்

ஆய்வு நிகழ்த்தினுல் கழக இலக்கியங்கள் காட்டும் மதுரை அரண் மனையையும் பிறவற்றையும் உணரலாம்-காணலாம் என்றும் அறிஞர் ம. ரா. போ. குருசாமி அவர்கள் தம் "சங்க காலத்திற்கு முன்" (பக்:11) என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார்கள்.

இப் பகுதியில் ஆய்வு செய்து மறைந்திருக்கும் அவ்வரலாற்று உண்மைகளை வெளிப்படுத்த இதுவே தகுந்த நேரம். நம் நாட்டு வெளிநாட்டு அறிஞர்க்கும் மக்கட்கும் இவ் வாய்வின் வழி அரிய வரலாற்று விருந்து கிடைக்கும் என்பதில் சிறிதும் ஐயம் வேண்டா.

நம் தமிழக முதல்வர் அவர்கள் மா நாட்டை யொட்டிச் செய் யப்படும் எல்லாப் பணிகளும் நிலையான பயன் தரத்தக்கவாய் இருக்க வேண்டுமெனக் கூறியுள்ளார்கள்.

அவர்களின் விருப்பத்திற்கு உவகையும் ஊட்டமும் தரும் முறையில் அமையும் பணிஇது. இப் பணி தமிழ்நாட்டு வரலாற்றின் இலக்கியத்தின் வாய்மை சான்ற வளத்தைப் புலப்படுத்துவதோடு, முதல்வரையும் வரலாற்றுச் சிறப்புடையவராக்கும் வலிமையுடையது

எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்களும், உலகத்தமிழ் மா நாட்டு விழாக்குழுவினரும் இவ் வேண்டுகோளில் கருத்தூன்றி மறைத்திருக்கும் வாலாற்று வளங்களை மக்கள் மனம் நிறைவு பெற வெளிப்படுத்த வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறோம்.

இப் பணி, மதுரை மா நாட்டின் மாண்பெருஞ் சிறப்பினைக் காலம் உள்ளளவும் காட்டி நிற்கும் ஏற்றமுடைய தென்பதனை உளங் கொண்டு மாண்புமிகு முதல்வர் அவர்களும் விழாக்குழுவினரும் விரைந்திந்த வியன்பணி புரிந்திடுவார்கள் என மிக்க அவாவோடு எதிர்நோக்குகின்றோம்.

'சிவம்' என்னும் சொல்

'சிவம்' என்னுஞ் சொல், செம்மை யென்னும் பண்படியாகப் பிறந்து சிவந்த நிறத்தையும் இன்பத்தையும் உணர்த்துஞ் சிறந்த சொல்லாகலா னும், இறைவன்றன் அறிவுருச் சிவந்த நிறத்தினதாயும் இன்ப நிலையின தாயும் இருக்கும் உண்மையினை நமக்கு நினைவுறுத்திக், காணவுங் கருதவும் படாத முதல்வன்றன் அறிவுருவினை நாம் காணவும் கருதவும் எளிதாம்படி வைத்து நமக்கு நினைவொருமையினைப் பயப்பித்தல் இச் சொற் போலக் கடவுளுக்குரிய வேறெச்சொல்லும் உதவி புரிதல் இல்லை.

—மறைமலையடிகள்

—மறைமலையடிகளார் அறிவுரைக் கோவை, பக். 27

இயந்திர மனிதர்கள்

[என். கே. வேலன், பி. ஏ.]

இக்காலத்தில் 'எலெக்ட்ரான்' என்னும் மின் அணுக்களின் உதவியால் அற்புதமான கருவிகள் இயக்கப்படுகின்றன. 'ரொபாட்' என்னும் மனித இயந்திரங்கள் இம் முறையில் செய்யப்படுகின்றன. இப் பொறிகள் மனித உருவத்துடன் நம்மைப்போல் பணி புரிகின்றன.

அண்மையில் அமெரிக்காவில் மனித இயந்திரக் காட்சி ஒன்று நடைபெற்றது. உலக நாடுகளெல்லாம் இதில் கலந்து கொண்டன. மனித இயந்திரங்களைத் தொழிற்சாலைகளில் பயன் படுத்தலாம் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டது. மனித இயந்திரம் ஒன்று நீண்ட கரங்களுடன் காணப்பட்டது. நாம் விரும்பிக்கேட்கும் சித்திரங்களை அது வரைந்து காட்டியது. ஏறக்குறைய 2 மீட்டர் உயரமும் 1 மீட்டர் அகலமும் உள்ள பெரிய படங்களை அதனால் வரைய முடிந்தது. அதன் மணிக்கட்டு நன்றாகச் சுழலக்கூடிய தாகவும் கைகளை வீசுவதற்கு ஏற்ற முறையிலும் செய்யப்பட் டிருந்தது.

மனிதர்களால்கூட வரைய முடியாத மிகச் சிறந்த ஓவியங்களை ஓர் இயந்திரம் வரைதலைக் கண்டு மக்கள் வியப்புற்றனர். ஓவியங்களை இப் பொறி கண்களால் பார்த்து வரையவில்லை. இயந் திரமூளை இயக்குநர் கற்றுக் கொடுத்த முறைகளை நினைவில் வைத் துக்கொண்டு நன்றாக வேலை செய்தது. இதன் விலை 65,000 டாலர்கள் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. கண்பார்வையுள்ள இயந் திரம் ஒன்று இக் காட்சியில் வைக்கப்பட்டிருந்தது. அதன் கண்களில் படம் பிடிக்கும் மின்சாரக் கருவிகள் பொருத்தப்பட்டிருந்தன. அதன் கழுத்து நீண்டிருந்தது. முகம் உலோகத்தினால் செய்யப்பட்டிருந் தது. அது பகடைக்காய்களை உருட்டி விளையாடிக் கொண்டிருந் தது, உருண்டு ஓடும் காய்களை எடுத்துக் கோப்பையில் போட்டது. அதனைக் கண்டு மக்கள் வியப்படைந்தனர்.

மற்றோர் இயந்திரம் 2·25 மீ உயரம் இருந்தது. அஃது உடற் பயிற்சி செய்து காண்பித்தது. ஆசிரியர் மாணவர்களுக்கு உடற் பயிற்சி கற்றுக் கொடுப்பது போல் அமைக்கப்பட்டிருந்தது. பச்சை நிறப் பொருள்களையும் சிவப்பு நிறப் பொருள்களையும் கலந்து

வைத்தால் பச்சைப் பொருள்களை மட்டும் பொறுக்கி எடுத்துக் கொடுத்தது. மின் அணுக்களின் ஆற்றலினுல்தான் இப் பொறிகளெல்லாம் இயக்கப்பட்டன.

அமெரிக்க நாட்டில் ஓர் ஆலையில் மனித இயந்திரம் ஒன்று துணிகளின் ஓரங்களைத் தைத்து, மடித்து, மூட்டை கட்டி அனுப்புகின்றது. மனிதர்களை விட ஒழுங்காகவும் விரைவாகவும் செயல் புரிகின்றது. இதனுல் உற்பத்தி செய்யும் செலவு குறைகின்றதெனக் கூறப்படுகின்றது.

''உழைப்பின் வாரா
உறுதிகள் உளவோ''

என்றபடி அறிஞர்களின் இடைவிடாத உழைப்பினுல் பல புதிய பொருள்கள் கண்டுபிடிக்கப்படுகின்றன.

காட்சிப் பொருள்களில் 1·35 மீட்டர் உயரமுள்ள மனித இயந்திரம் ஒன்று இருந்தது. அஃது ஆடிப்பாடி அனைவரையும் மகிழ்வித்தது. குதித்தல், வளைதல், சாய்தல், திரும்புதல் ஆகியவற்றையெல்லாம் வியப்புறும் வண்ணம் செய்தது. இயக்குநருக்கு வணக்கம் செலுத்தியது. உயிருள்ள மனிதனைப் போலவே அது நடித்தது. நீல நிறமான பட்டுத் துணியொன்றை விரித்து அதன் மேல் நாட்டியம் ஆடிற்று.

மனித இயந்திரங்களைப் பல வழிகளில் பயன்படுத்துகின்றனர். இவற்றைப் பூதங்களைப் போல் உருவாக்கிப் பகைவரின் மேல் ஏவி விடலாம். இயந்திர மனிதர்களை அழித்தல் தொழிலுக்குப் பயன்படுத்தாமல் ஆக்கப் பணிகளுக்குப் பயன்படுத்தலாம். மனிதனைப் போன்ற இயந்திரங்கள் செய்வது முதலில் கற்பனைக் கதைகளில் வந்தது. இப்பொழுது உண்மையாகவே நிகழ்ந்து விட்டது. ஓர் அறிஞர் பக்கத்து வீட்டுப் பையனைப் போலவே ஒரு இயந்திரப் பையனைச் செய்தார். அவன் உடம்பிற்குள் இருந்த பொறி மின் அணுக்களின் உதவியால் இயங்கிற்று. இயந்திரப் பையன் இயக்குநரின் கையிலிருந்து தப்பிச் சென்று பக்கத்து வீட்டுப் பையனுடன் சேர்ந்து விளையாடினுன். இருவருடைய தோற்றங்களும் ஒன்று போலிருந்தன.

பக்கத்து வீட்டுப் பையன் சரியாகப் பாடங்களைப் படிக்கமாட்டான். கணிதப்பாடத்தில் பின் தங்கியவனுக இருந்தான். ஓட்டப் பந்தயங்களில் சேரமாட்டான். இயந்திரப்பையன் சோம்பேறிப்

பையனை மறைத்து வைத்துவிட்டுப் பள்ளிக்குச் சென்றான். எல்லாப் பாடங்களிலும் முதல் மாணவனாகத் தேர்ச்சிபெற்றான். ஓட்டப்பந்தயங்களில் முதல் பரிசு பெற்றான். ஆசிரியர்களும் மாணவர்களும் பெருவியப்புற்றனர். 'எலெக்ட்ரானிக்' என்ற மின் ஆற்றலினால் இயந்திரப்பையன் ஓடி ஆடிக் கொண்டிருந்தான். மின் ஆற்றலை இழந்தவுடன் அவன் கீழே சாய்ந்துவிட்டான். உண்மை வெளிப்பட்டது. இயக்குநர் ஓடி வந்து மின்சக்தியை ஏற்றினார். இயந்திரம் புத்துயிர் பெற்றது. அறிஞர் அதனைத் தம்முடன் எடுத்துச் சென்றார். பக்கத்து வீட்டுப்பையனைத் தேடிக் கண்டுபிடித்துப் பள்ளிக்கு அனுப்பினார். இவ்வாறு கதை முடிகின்றது.

எதிர்காலத்தில் இதைப் போன்ற பல அற்புதங்கள் நிகழக் கூடும். மனித இயந்திரங்களை வான உலகங்களுக்கு அனுப்பலாம். நிலவில் மின்சார நிலையங்களை அமைக்கலாம். நமக்கு வேண்டிய அளவு மின் ஆற்றல் கிடைத்துக்கொண்டே இருக்கும். பற்றாக் குறை நீங்கிவிடும் என ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

தமிழர் முன்னேற வழி

''தமிழ் மொழிக்கும் கலைக்கும் ஊறு நேராத படி பாதுகாக்கத் தமிழர் திரண்டுவிடுவது போலவே, தமிழரின் தன்மானம் பறிக்கப்படும் போது தமிழர்கள் எந்தக் கட்சியினிடம் இருப்பினும், தமிழர் அணிவகுப்பில் வந்து சேரவேண்டும். தமிழரைச் சமமாக நடத்த மறுக்கும் சிறு கூட்டத்தை எதிர்க்க ஒன்று சேரவேண்டும். தமிழ்நாட்டைப் பிற நாட்டாரோ பிற இனத்தாரோ பங்கப் படுத்த-வளங்குன்றச் செய்ய-செல்வத்தைச் சுரண்ட முற்படும் வேளைகளில் தமிழர்கள் ஒன்றாகத் திரண்டெழ வேண்டும். தமிழரின் மறுமலர்ச்சிக்கு இந்த எண்ணமே உறுதுணை. இந்த எண்ணத்துடன் தமிழர் பணி யாற்றுவரேல் தமிழர் முன்னேறிவிடுவர் என்பது திண்ணம்!''

—பேரறிஞர் அண்ணா

பெருந்தகை செ. தெ. நாயகம் அவர்களின் நூற்றுண்டு விழாவும் சில திறப்பும்

தன்மான இயக்கப் பெருமக்களுள் ஒருவரான திருவாளர் செட்டிகுளம் தெய்வநாயகம் (C. D. Nayagam) அவர்களின் நூற்றுண்டு விழா, அவருக்குச் செய்யும் நன்றிக்கடன் மட்டுமன்று; தமிழ்மக்கள் அனைவருக்கும் மன எழுச்சி யூட்டுவதுமாகும்.

திருநெல்வேலி மாவட்டத்தில் குலசேகரன் பட்டினத்தை யடுத்த செட்டிகுளம் என்னுஞ் சிற்றூரில் 7—10—1878இல் திருவாளர் நெல்லைநாயகம் என்பாருக்கு நன்மகனுராகப் பிறந்த தெய்வநாயகம் அவர்கள் குலசையில் தமது பள்ளிப்படிப்பை முடித்தார்; சென்னைப் பல்கலைக் கழகத்தில் பயின்று கலை இளைஞர் (B. A.) பட்டம் பெற்றுர். சென்னை முத்தியாலுப்பேட்டை உயர் நிலைப் பள்ளியில் ஆசிரியப் பணியேற்றுர்.

அக் காலத்தில் வயவர் (சர்) பி. தியாகராயரும் மற்றும் பெரு மக்கள் சிலருஞ் சேர்ந்து "தென்னிந்திய நலவுரிமைச் சங்கம்" என்னும் பெயரில் அரசியல் குமுகாயச் சீர்திருத்த இயக்கம் ஒன்றை நிறுவினர். அவ்வியக்கத்தின் சார்பில் "The Justice (நயன்மை)" என்னும் பெயரில் செய்திஇதழ் ஒன்று வெளிவந்தது. நாளடைவில் தென்னிந்திய நலவுரிமைச் சங்கம் "நீதிக்கட்சி" என்னும் பெயரில் மக்களுக்கு அறிமுகமாகியது. திரு. தெய்வநாயகம் அவர்களை நீதிக்கட்சியின் கொள்கைகள் கவர்ந்தன. அவர் அவ் வியக்கத்தில் சேர்ந்து பணியாற்றினுர்; அதன் செயலாளராகவும் விளங்கினுர். மேற்கூறிய "The Justice" இதழ் வெளியீட்டில் திரு நாயகம் அவர்களின் முயற்சி குறிப்பிடத்தக்கது.

ஆசிரியப் பணியைக் கைவிட்டு, வணிகத் தொழிலில் ஈடுபட்டு அதில் நொடிப்புற்ற நாயகம் 1917இல் மீண்டும் வயவர் பி. தியாக ராயரைத் தாளாளராகக் கொண்ட புரசைவாக்கம் சி. ஆர். சி. உயர் நிலைப்பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றினுர். செட்டிநாட்டரசர் அரச வயவர் முத்தையா செட்டியார் அவர்கள் அக் காலத்தில் திரு நாயகம் அவர்களிடம் பயின்ற மாணவர்களுள் ஒருவராவர்.

1922ஆம் ஆண்டு முதல் அரசிதழ்ப் பதிவு அலுவலராக—கூட்டுறவுத்துறை துணைப் பதிவாளராகப் பணியாற்றிய திரு நாயகம்

1934இல் ஓய்வு பெற்றார்; பெரியாரின் தன்மான இயக்கப் பணிகளில் ஈடுபட்டார். 1938இல் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு இயக்கத்தில் பெரியார் அவர்களால் படைத்தலைவராக அமர்த்தப்பெற்றார்; இந்தி எதிர்ப்புப் போரில் 18 மாதங்கள் சிறைத்தண்டனை பெற்றார்; பேரறிஞர் அண்ணாவுடன் சிறைவாழ்வு மேற்கொண்டார்.

1933இல், தமிழை இழிவுறுத்தும் ஒரு கூட்டத்தார் ''தமிழன்பர் மாநாடு'' என்னும் பெயரில் ஒரு நிகழ்ச்சியை நடத்தினர். அதில் உண்மைத் தமிழறிஞர்கள் யாரும் ஈடுபடவில்லை. பன்முறை யழைத்தும் மறைத்திரு மறைமலையடிகளார் அவர்கள் இம் மாநாட்டில் கலந்துகொள்ள மறுத்துவிட்டார்கள். மாநாட்டிற்குச் சென்ற திரு நாயகம் அவர்கள் ஆங்குப் போர்க்குரல் எழுப்பி மாநாட்டை நடத்தவிடாதும், மாநாடு கூட்டியவர்களின் கரவான எண்ணம் நிறைவேறவிடாதும் செய்தனர். இம் முயற்சியில் ஈடுபட்டவர்களுள் திரு மகிழ்நன் (க. ப. சந்தோஷம்) அவர்களும் குறிப்பிடத் தக்கவராவர்.

திரு. நாயகம் அவர்கள் கல்விப் பயிற்சியிலும் வளர்ச்சியிலும் பெரிதும் ஆர்வமும் அக்கறையும் கொண்டவர். டாக்டர் சிலேட்டரிடம் பொருளியல் கல்விப் பயிற்சி பெற்றுவந்த நாயகம், அவருடைய பரிந்துரையின்பேரில் 1920—21இல் தமது 43ஆம் அகவையில் பச்சையப்பன் கல்லூரியில் தனி இசைவு பெற்றுப் பொருளியல் வகுப்பில் மாணவராகச் சேர்ந்து பயின்றார். பெண் கல்வி போற்றப்படாத அக் காலத்திலேயே தம் மனைவியார் தாயம்மையை மேற்படிப்புப் படிக்கச் செய்தார். அவ் வம்மையார் காலமாகிவிடவே தமது 32ஆம் அகவையில் தாம் மறுமணம் செய்துகொண்ட சிதம்பரத்தம்மையாரையும் கல்விகற்க வைத்தார். இவர்தம் திருமகளார் உடற்கல்வித் துறையில் மேற்படிப்புப் படித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. சென்னையிலுள்ள தியாகராயர் உயர்நிலைப் பள்ளியும் குலசேகரன் பட்டினத்திலுள்ள தாயம்மை உயர்நிலைப் பள்ளியும் இவரால் நிறுவப்பெற்றனவேயாம். சிக்கனமாக வாழ்ந்து தாம் சேர்த்த கைப்பொருளைக் கல்வி வளர்ச்சிக்கே செலவிட்ட அவர் எஞ்சிய செல்வத்தையும் 'கல்விப்பணி'' என்னும் பெயரில் அறக்கட்டளை நிறுவ ஆவணம் எழுதி வைத்துள்ளார். அவர்தம் நற்பணிகள் போற்றற்பாலன.

7—10—79 ஞாயிறன்று மாலை 5 மணி அளவில் சென்னைத் தியாகராய நகரிலுள்ள தியாகராயநகர் உயர்நிலைப் பள்ளியில் திரு. செ. தெ. நாயகம் அவர்கள் நூற்றாண்டு விழா தமிழ்நாட்டரசின்

சிறப்புத் தொடர்பாளர் மாண்புமிகு க. இராசாராம் அவர்களின் தலைமையில் சிறப்புற நடைபெற்றது. கடவுள் வாழ்த்து, தமிழ்த்தாய் வாழ்த்து ஆகியவற்றையடுத்துக் 'கல்விப்பணி' அறக்கட்டளைப் பொறுப்பாளர் ஓய்வுபெற்ற பொறியர் திரு. சே. பா. நமசிவாயம் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினர். டாக்டர் செ. ந. தெய்வ நாயகம் அவர்கள் நூற்றாண்டுவிழா நாயகரான தம் பாட்டனர் அவர்களின் சிறப்புக்களை ஆங்கிலத்தில் கேட்டார் உவக்கும் வகையில் எடுத்துரைத்தார். தமிழ்நாட்டு ஆளுநர் மாண்பமை பிரபுதாசு பட்டுவாரி அவர்கள் 'கல்விப்பணி' நிறுவனர் செ. தெ. நாயகம் அவர்களின் உருவச்சிலையையும், உயர் அறமன்ற நடுவர் மாண்புசால் எம். எம். இசுமாயில் அவர்கள் நூற்றாண்டு விழா நினைவுக் கட்டிடத்தையும் திறந்துவைத்தனர். மதுரை வழக்கறிஞர் பி. சோமசுந்தரம் அவர்களின் நன்றியுரைக்குப்பின் நாட்டுப்பண்ணுடன் விழா இனிது நிறைவுற்றது.

———

அறவினை அண்ணல், வள்ளல்
செ. தெ. நாயகம்

நெல்லை மாவட்டம் தந்த நற்றவப் பெரியோர்—நன்னெறிச் சிலர் தமிழ்மொழி, தமிழகம், தமிழினம் ஆகியவற்றின் முன்னேற்றத்தில் தணியா ஆர்வங் தழைத்த பண்பாளர்—நடுத்தரக்குடியில் தோன்றித் தளரா ஊக்கத்தால்—உழைப்பால்—செயற்கருஞ் செயலால் உயர்ந்த பெருமகனர் காலஞ்சென்ற செ. தெ. நாயகம் அவர்கள் ஆவார்.

இந்த நாட்டில் தாழ்த்தப்பட்ட—பின் தங்கிய—பழங்குடி மக்களின் வழிவந்த ஏழைச்சிறார் தமக்கு எழுத்தறிவிக்கும் பணியே எமது முதல்தொண்டு என்னும் குறிக்கோளுடன் தாளாற்றித் தேடிய செல்வத்தின் பெரும்பகுதியை அக் கல்விப் பணிக்கெனச் செலவிட முன்வந்தவர்.

இத்தகைய விழுமிய சிந்தனையோட்டத்தின் செயல் வடிவமாக நெல்லை மாவட்டத்தைச் சார்ந்த குலசைப் பகுதியிலும், தமிழகத்தின் தலைநகரத்தைச்சார்ந்த தியாகராயநகரிலும் அறிவாலயங்களைத் தோற்றுவித்த நிறுவனர்—அறவினை அண்ணல் செ. தெ. நாயகம்.

நன்றி : தியாகராயநகர் உயர்நிலைப்பள்ளி (1977—78) ஆண்டு மலர்.

பெருந்தகை செ. தெ நாயகம் நூற்ருண்டுவிழா



சிலை திறப்பு நிகழ்ச்சி

7-10-1979

சென்னைத் தியாகராயர் மேல்நிலைப்பள்ளி

2 டாக்டர் செ. ஞெ. தெய்வநாயகம், 4. தமிழக ஆளுநர் மாண்பமை பிரபுதாசு பட்டுவாரி 5. மாண்புமிகு க. இராசாராம், 6. சே. பா. நமசிவாயம், 7. வழக்கறிஞர் பி. சோமசுந்தரம்.

முன்னாள் உயர்நீதிமன்றத் தலைமை நடுவர் உயர்திரு இராசமன்னார் மறைவு

சென்னை உயர்நீதிமன்ற முன்னாள் தலைமை நடுவரும் நீதித் துறையில் வல்லுநருமான உயர்திரு இராசமன்னார் அவர்கள் 1-10-79 இல் தமது 79 ஆம் அகவையில் காலமானார்கள் என்ற செய்தியறிந்து வருந்துகிறோம். திரு இராசமன்னார் அவர்கள் நம் கழகத்திடமும் கழக ஆட்சியாளரவர்களிடமும் மிக்க பற்றுடையவர். கழக நூற்பதிப்புப் பணியினையும் சைவத்திற்கும் தமிழுக்கும் கழகம் ஆற்றி வரும் பணிகளையும் என்றும் அவர் பாராட்டத் தவறியதில்லை. எடுத்துக்காட்டாகக் கழகத்தின் 1008 ஆவது நூல் வெளியீட்டு விழாவின்போது அவர் கழகப் பணிகளைப் பாராட்டி அனுப்பிய வாழ்த்துச் செய்தியே போதிய சான்றாகும். அவ் வாழ்த்துச் செய்தியின் சுருக்கம் வருமாறு :



"1920 ஆம் ஆண்டு முதல், அஃதாவது அதன் துவக்க கால முதல் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் ஆற்றிவரும் உயர் பணிகளை அறிந்து பெருமகிழ்ச்சி அடைகிறேன். கழகம் மேற்கொண்டிருக்கும் சைவசமய முன்னேற்றம், தமிழ் மொழியின் ஆக்கப் பணிகள் ஆகியன பெரிதும் பாராட்டற்குரியன. இத்தகைய பணியாற்றும் நிறுவனங்கள் மிக அரியனவாகும். சைவத்திற்கும் தமிழுக்கும் தொண்டாற்றப் போதிய பதிப்பகங்கள் இல்லையே என்று நான் வருந்தியதுண்டு. இந் நிலையில் கழகம் ஒரு தனித்தன்மை வாய்ந்ததாக விளங்குகிறது. இலக்கியம், சமயம், வரலாறு ஆகிய துறைகளில் நூல்கள் வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டு ஆயிரத்துக்கு மேற்பட்ட நூல்களை வெளிக்கொணர்ந்திருக்கும் கழகத்தின் முயற்சி பெரிதும் பாராட்டத்தக்கது."

இத்தகைய நல்லுள்ளம் படைத்தவரும் நீதித்துறையில் சிறந்த பட்டறிவாளருமான இவரது மறைவு நாட்டிற்குப் பேரிழப்பாகும். நடுவர் அவர்களை இழந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தார்க்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

— —

பெரியார் நூற்றாண்டு நிறைவுவிழாச் செய்திகள்

பெரியார் நூற்றாண்டு நிறைவு விழா முறையே 16, 17—9—79 நாள்களில் சென்னை வள்ளுவர் கோட்டத்தில் சீருஞ் சிறப்புமாக நடைபெற்றது. தமிழக ஆளுநர் மாண்பமை பிரபுதாசு பட்வாரி விழாவைத் தொடங்கி வைத்து உரையாற்றினார். இவ் விழா காலை மாலை இருவேளைகளிலும் நடைபெற்றது.

காலையில் நடுவர் மோகன் அவர்கள் தலைமையில் கருத்தரங்கு நடைபெற்றது. கல்வி அமைச்சர் மாண்புமிகு அரங்கநாயகம், ஏ. பி. சனார்த்தனம், டாக்டர் ஹண்டே, நெ. து சுந்தரவடிவேலு, எஸ். வி. சிட்டிபாபு, டாக்டர் பா. நடராசன், டாக்டர் ஏ. கிருட்டிண சாமி, டாக்டர் அழகப்பன், டாக்டர் பொற்கோ, திருவாரூர் தங்க ராசு, எம். ஆர். சுப்பையா, எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் ஆகி யோர் கலந்து கொண்டனர்.

அன்று மாலை மின்துறை அமைச்சர் இராமச்சந்திரன் தலைமையில் டி. எஸ். மகராஜன் குழுவினரின் இசைவிழாவும், சட்டமன்றத் தலைவர் முனு ஆதி துவக்கி வைக்க, கவிஞர் சுரதா அவர்கள் தலைமையில் கவியரங்கமும் நடைபெற்றன.

17—9—79 இல் நடைபெற்ற விழாவில் திருமதி தாரகேசுவரி சின்கா துவக்க உரை ஆற்றினார். அமைச்சர் பி. டி. சரசுவதி வர வேற்புரை நிகழ்த்தினார். மைய அரசின் அமைச்சர் சத்தியவாணி முத்து தலைமை தாங்கினார். அறிஞர் பலர் உரையாற்றினர்.

பின்னர் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில் நாவலர் நெடுஞ் செழியன், அமைச்சர் வீரப்பன், முதல்வர் எம். ஜி. இராமச்சந்திரன் மற்றுமுள்ள அமைச்சர்கள் ஆகியோர் பெரியாரின் பெரும்பணிகள் பற்றிப் பேசினர்.

தஞ்சையில் பெரியார் நூற்றாண்டு நிறைவு விழா :

திராவிடர் கழகத்தின் சார்பில் 17—9—79இல் தஞ்சை திலகர் திடலிலுள்ள நாகம்மை, மணியம்மையார் அரங்கில் பெரியார் நூற் றாண்டு நிறைவு விழா நடைபெற்றது. இவ் விழாவையொட்டிப் பெரியார் பொருட்காட்சியொன்று அமைக்கப்பட்டிருந்தது. அங்ங னமே பெரியார் படக்காட்சியொன்றும் நடைபெற்றது. இக் காட்சிகளை அன்பில் தர்மலிங்கம் திறந்து வைத்தார். சென்னை கன்னியாகுமரி ஆகிய இடங்களிலிருந்து கால்நடையாகப் புறப்பட்டு வழிநெடுகக் கொள்கை முழக்கம் செய்து கொண்டே தஞ்சை மாநாட் டிற்கு வந்த வீரர்களுக்குப் பேராசிரியர் அன்பழகன் நற்சான்றிதழ் களை வழங்கினார். நீண்ட காலமாகப் பெரியாரின் கொள்கைகளைப்

பரப்பிக் கட்சிப் பணியாற்றி வரும் திராவிடர் கழக வீரர்கள் ஒவ்வொருவருக்கும் "பெரியார் தொண்டர்" என்று பொறிக்கப்பட்ட அழகிய பட்டயங்களைத் திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் வீரமணி வழங்கினார். திராவிடர் கழகத்தின் சார்பில் மாவட்டந் தோறும் கடந்த ஓராண்டு காலம் நடைபெற்றுவந்த இப் பெரியார் நூற்றாண்டு விழா இங்ஙனம் தஞ்சையில் சிறப்புற நிறைவுற்றது.

பெரியார் மாவட்டம் தோன்றிற்று :

கோபிச் செட்டிப்பாளையம், பவானி, சத்தியமங்கலம், தாராபுரம், பெருந்துறை, ஈரோடு ஆகிய வட்டங்கள் அடங்கிய பகுதி தமிழ் நாட்டின் 16ஆவது மாவட்டமாகப் பெரியார் நூற்றாண்டு நிறைவினை முன்னிட்டுத் தோன்றியுள்ளது. இம் மாவட்டம் 8170 சதுர கிலோமீட்டர் பரப்புள்ளதாகவும், 20 நூறாயிரம் மக்கள்தொகை கொண்டதாகவும் 5 நகராட்சிகளும் 60 பேரூராட்சிகளும், 346 சிற்றூர் ஆட்சிகளும் அடங்கிய மாவட்டமாகவும் திகழும். தந்தை பெரியாரின் பிறந்த நாளாகிய செப்டம்பர் 17ஆம் நாள் தொட்டு இம் மாவட்டம் இயங்கத் துவங்கியுள்ளது.

வேலூரில் பெரியார் நூல் நிலையம்:

தற்போது வேலூரில் உள்ளூர் நூல் நிலையப் பொறுப்பில் இயங்கி வரும் மாவட்ட மைய நூல் நிலையத்திற்குத் "தந்தை பெரியார் ஈ. வே. இராமசாமி மாவட்ட மைய நூல் நிலையம்" என்று பெயர் மாற்றம் செய்யத் தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

முத்தமிழ் விழா

பேரறிஞர் அண்ணா அவர்களின் 71ஆவது பிறந்த நாளையொட்டித் தமிழ்நாட்டு அரசின் செய்தி மக்கள் தொடர்புத் துறையினர் ஏற்பாடு செய்திருந்த முத்தமிழ் விழா 15—9—79 காலையில் சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் சீருஞ் சிறப்புமாக நடைபெற்றது. மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் திரு. ம. பொ. சிவஞானம் தலைமை தாங்கினார். உயர் நீதி மன்ற நடுவர் திரு. பி. ஆர். கோகுலகிருட்டிணன் விழாவைத் துவக்கி வைத்தார். செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் ஔவை நடராசன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

நடுவர் கோகுலகிருட்டிணன் பேசுகையில் அண்ணா கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்டு விளங்கிய தமிழினத் தலைவர் என்றும் அரசியல் வாழ்வு, தமிழ் வளர்ச்சி ஆகியவற்றில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டவர் என்றும் கூறினார்.

திரைப்படத் துறையின் பெருமையினைத் தம்முடைய எழுத்தாற்றலால் உயர்த்திக் காட்டியவர் அறிஞர் அண்ணா என்று திரைப்பட இயக்குநர் திரு. ஏ. எஸ். ஏ. சாமி குறிப்பிட்டார்.

மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் வ. சுப. மாணிக்கம் அவர்கள் பேசுகையில் அண்ணா அவர்களின் எழுத்துக்களையும் பேச்சுக்களையும் முழுப்பதிப்பாக அரசு வெளியிட வேண்டும் என்றும் அவற்றை மொழி பெயர்த்து வெளிநாடுகளிலும் பரவச் செய்ய வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் பேசுகையில் மாற்றுக் கருத்துடையோரையும் அரவணைத்துத் தமிழ் இனத்தை உயர்த்தியவர் அண்ணா என்று கூறினர்.

நிதியமைச்சர் நாஞ்சில் மனோகரன் பேசுகையில் இந்தியத் துணைக் கண்டத்துத் தலைவர்கள் மட்டுமன்றிப் பல வெளிநாட்டுத் தலைவர்களும் வியந்து பாராட்டத்தக்க பெருமை படைத்தவர் அண்ணா என்பதைச் சுட்டிக் காட்டினர்.

தலைமை தாங்கிய சிலம்புச் செல்வர் தமக்கும் அண்ணா அவர்கட்குமிடையே இருந்த நீண்ட கால நட்பினை விளக்கிப் பேசினர்.

மற்றும் டாக்டர் இரா. சனர்த்தனம், அகிலன், கு. இராசவேலு, மா. முத்துச்சாமி, டி. கே. சீனிவாசன் ஆகியோரும் அண்ணா அவர்களின் அறிவாற்றல் பண்பு நலன்கள் குறித்துப் பேசினர்.

அண்ணா நினைவுக் கோட்டம் :

இவ் விழாவின் பிற்பகல் நிகழ்ச்சிகட்குக் கல்வி அமைச்சர் மாண்புமிகு செ. அரங்கநாயகம் தலைமை தாங்கினர். மாண்புமிகு அமைச்சர் வீரப்பன் வரவேற்புரை நிகழ்த்தினர். அரசு வருமான வாரிய உறுப்பினர் கா. திரவியம், தீபம் பார்த்தசாரதி, மைய அரசின் அமைச்சர் பாலாபழனூர், மற்றும் அமைச்சர்கள் சிலர் சட்ட மன்ற உறுப்பினர்கள் ஆகியோர் உரையாற்றினர்.

முதல்வர் மாண்புமிகு எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் பேசுகையில் அறிஞர் அண்ணா அவர்களின் படைப்புக்களையும், பல பெரியவர்கள் எழுதிய நூல்களையும் அரசே வெளியிடும் என்றும் காஞ்சியில் உள்ள அண்ணா அவர்களின் இல்லத்தை அரசு விலை கொடுத்து வாங்கி அதனை **அண்ணா நினைவுக் கோட்டம்** ஆக்க முடிவு செய்திருப்பதாகவும் கூறினர்.

இம் முத்தமிழ் விழாவினையொட்டி, துவக்கத்தில் சீர்காழி கோவிந்தராசனின் இசை அரங்கு நடைபெற்றது. இறுதியில் அண்ணா அவர்கள் இயற்றிய 'நீதிதேவன் மயக்கம்' என்னும் நாடகமும் நடைபெற்றது.

———

செய்திகளும் குறிப்புக்களும்

முப்பெருவிழா

பெரியார் நூற்றூண்டு நிறைவுவிழா, பேரறிஞர் அண்ணு 71ஆவது பிறந்தநாள்விழா, தி.மு.கழகத்தின்30ஆவது ஆண்டுவிழா ஆகியவற்றை முப்பெரு விழாவாகத் தி. மு. கழகத்தவர் தமிழ்நாடெங்கும் கொண் டாடினர். இதன் தொடர்ச்சியாக 30—9—79இல் சென்னைக் கடற்கரை யில் பெரியார் நூற்றூண்டு நிறைவு—அண்ணு பிறந்தநாள் விழா பெரிய அளவில் சிறப்புறக் கொண்டாடப்பட்டது. விழாவிற்குப் பேராசிரியர் க. அன்பழகன் தலைமை தாங்கினுர். மேனுள் இந்தியத் தலைமையமைச்சர் திருவாட்டி இந்திராகாந்தியம்மையார், மேனுள் தமிழக முதல்வர், கலைஞர் கருணுநிதி, திருவாளர்கள் இளைய பெருமாள், கருப்பைய மூப்பனுர், அப்துல் சமது முதலியோர் கலந்துகொண்டு உரையாற்றிச் சிறப்பித்தனர்.

திரு. கே. என். சிவராச பிள்ளை நூற்றூண்டு விழா

சென்னைப் பல்கலைக் கழகத்தின் முதல் தமிழ்த் துறைத் தலைவராய் விளங்கிய திரு. கே. என். சிவராச பிள்ளை அவர்களின் நூற்றூண்டு விழாவும், அண்ணுமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவராய் விளங்கிய டாக்டர் நாவலர் ச. சோமசுந்தர பாரதியாரின் நூற்றூண்டு விழாவும் செப்டம்பர் 19, 20ஆம் நாள்களில் மாலை 5-15 மணிக்குச் சென்னைப் பல்கலைக் கழக நூற்றூண்டுவிழா மண்டபத்தில் நடை பெற்றது. சிவராச பிள்ளை நூற்றூண்டுவிழாவிற்குப் பேராசிரியர் அ. கி. பரந்தாமனுரும், நாவலர் சோமசுந்தர பாரதியார் நூற்றூண்டு விழாவிற்குப் பேராசிரியர் அ. மு. பரமசிவானந்தம் அவர்களும் தலைமை தாங்கினர். புலவர் மு. சண்முகம் பிள்ளை, பேராசிரியர் க. த. திருநாவுக் கரசு ஆகியோர் உரையாற்றினர்.

அண்ணுமலைப் பல்கலைக் கழகம்: 19வது புலவர் திருநாள்

19வது புலவர் திருநாளையொட்டி அண்ணுமலைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழா மன்றத்தில் செப்டம்பர் 24, 25, 26ஆம் நாள்களில் சொர்ணும்பாள் நினைவுச் சொற்பொழிவுகள் நடைபெற்றன. தவத்திரு குன்றக்குடி அடிகளார் "திருவள்ளுவர்" என்னும் பொருள்பற்றிச் சொற்பொழிவாற்றினுர். துணைவேந்தர் முன்னுள் நீதிபதி ப. சொ. சோமசுந்தரம் அவர்கள் டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்களின் படத்தைத் திறந்து வைத்தார். அடுத்துத் தமிழ்க்கடல் ராய. சொ. அவர் களின் படத்தைத் தவத்திரு. குன்றக்குடி அடிகளார் திறந்து வைத்தார்.

புலவர் திருஞானசம்பந்தம் அவர்கட்குப் பாராட்டு

புரசை, எம். சி. டி முத்தைய செட்டியார் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர் கழகத்தின் சார்பில் 6—9—79இல், கல்வித்துறையில் சிறந்த

பணியாற்றிய மூவருக்குப் பாராட்டு விழா நடைபெற்றது. அம் மூவருள் குலபதி எஸ். பாலகிருஷ்ண ஜோஷி அவர்கள், கல்வித்துறையில் 50 ஆண்டுகள் பணியாற்றிச் சிறப்புப் பெற்றவர். அடுத்தவர் திரு. கே. பார்த்தசாரதி அவர்கள். இவருக்கு அண்மையில் கொலராடோ பல்கலைக் கழகம் D. Litt பட்டம் வழங்கிச் சிறப்பித்தது. மூன்றாமவர் முத்தைய செட்டியார் உயர்நிலைப் பள்ளியில் பல்லாண்டுகளாகத் தமிழாசிரியராகச் சிறந்த பணியாற்றி வரும் **புலவர் திருஞானசம்பந்தம்** அவர்கள். இவருக்கு அண்மையில் தமிழக அரசு நல்லாசிரியர் விருது அளித்துச் சிறப்பித்தது. இம் மூவரும் கல்வித்துறையில் ஆற்றிய பணிச் சிறப்புகளுக்காக நடைபெற்ற இப் பாராட்டு விழாவிற்குச் சென்னை மாவட்டக் கல்வித்துறை அலுவலர் திரு. எம். சிவதாணுப் பிள்ளை பி. ஏ., பி. டி. அவர்கள் தலைமை தாங்கினார்கள்.

நெல்லை, சுந்தர ஓதுவா மூர்த்தி திருமுறை மன்ற 3ஆவது ஆண்டு நிறைவு விழா

நெல்லை, சுந்தர ஓதுவா மூர்த்தி திருமுறை மன்றத்தின் 3ஆவது ஆண்டு நிறைவு விழா 27—9—79இல் அருள்மிகு நெல்லையப்பர் காந்திமதியம்மன் திருக்கோயில் ஊஞ்சல் மண்டபத்தில் நடைபெற்றது. மன்றச் செயலர் மு. சு. சங்கர் அனைவரையும் வரவேற்று, மன்றப் பணிகளை விளக்கிப் பேசினார். "இலக்கிய வழியில் திருமுறைப் பணிகள்" என்ற தலைப்பில் குடந்தை இசைப் புலவர் திரு. ப. சுந்தரேசன் அவர்கள் ஓர் அரிய சொற்பொழிவாற்றினார்.

திரு. சொ. ர. தேமொழியார் நடத்தும் வகுப்புகள்

ஒவ்வொரு செவ்வாய், புதன் கிழமைகளில் மாலை 6 மணியளவில் சென்னை முல்லாசாகிப் சந்து எண் 1இல் **திருமந்திரம்** வகுப்பும், ஞாயிறு மாலை 4 மணியளவில் சிந்தாதிரிப்பேட்டை கலவ செட்டித் தெரு, பால சைவ சுத்த சன்மார்க்க சங்கத்தில் **திருஅருட்பா** வகுப்பும், சைதை காரணீசுவரர் கோயிலில் ஞாயிறு மாலை 7 மணியளவில் **திருக்கோவையார்** வகுப்பும் திரு. சொ. ர. தேமொழியார் அவர்களால் நடத்தப் பெறும்.

சிறப்புப் பணியாற்றிய ஆசிரியர்கட்கு விருது வழங்கு விழா

தமிழக ஆசிரியர்களில் சிறந்த பணியாற்றியவர்கள் என 196 ஆசிரியர்களைத் தேர்ந்தெடுத்து அவர்கட்கு விருது வழங்கியுள்ளனர் தமிழக அரசினர். இவ் விருது வழங்கு விழா பெரியார் பிறந்த நாளாகிய செப்டம்பர் 17இல், சென்னைக் கலைவாணர் அரங்கில் நடைபெற்றது. விழாவிற்குக் கல்வி அமைச்சர் அரங்கநாயகம் அவர்கள் தலைமை தாங்கினர். தமிழ்நாடு பள்ளிக்கூடக் கல்வி இயக்குநர் டாக்டர் கி. வேங்கடசுப்பிரமணியம் வரவேற்புரை நிகழ்த்தினர்.

30 ஆசிரியைகள் உட்பட 196 ஆசிரியர்கட்குத் தமிழக ஆளுநர் பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் வெள்ளிப் பதக்கங்களை வழங்கிப்

பாராட்டினர். மாணவர்கள் அறிவு வளர்ச்சியிலும் பண்பாட்டிலும் சிறந்து விளங்க ஆசிரியர்கள் உறுதுணையாக இருக்கவேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

கல்வி அமைச்சர் தமது தலைமை உரையில், மேல்நிலைக் கல்வி நல்ல முறையில் நடந்து வருவதாகவும் அதன் வெற்றிக்குக் காரணம் ஆசிரியர்கள்தாம் என்றும் கூறினர். கல்வித்துறைச் செயலாளர் இ. சி. பி. பிரபாகர் பாராட்டுரை வழங்கினர். இப் பாராட்டுகட்கு நன்றி தெரிவித்து ஆசிரியர் பி. எம். லோகநாதன், ஆசிரியை பிரபாவதி ஆகியோர் பேசினர். திரு. வி. ஆனந்தராஜ் நன்றி கூறினர்.

திருக்குறள் பீடத்தில் இளவரசுப் பட்டம்

1—10—79 திங்கட்கிழமை 'விசயதசமி' திருநாளன்று, மாம்பாக்கம் குருகுலம் திருக்குறள் பீடத்தின் இளவரசாகச் செல்வத்திரு குருபழநி அவர்கள் அமர்த்தப்பெற்றுள்ளார். தொடக்கப்பள்ளித் தலைமையாசிரியர் திரு. நா. சுப்பிரமணியம், திருவாட்டி மாணிக்கவல்லியம்மை ஆகியோரின் மூத்த மகனை இவர் மயிலம் தமிழ்க்கல்லூரியில் மூன்ருமாண்டு பயிலும் மாணவராவர்.

செயப்பிரகாச நாராயணர் மறைவு

இந்திய நாட்டின் விடுதலைக்காக அரும்பாடுபட்டவரும், நாட்டில் குமுகாயப் பொதுவுடைமை மலரச் "சர்வோதய" இயக்கம் கண்டவரும், முழுப் புரட்சியின் தந்தையும், இத் தலைமுறையின் ஒப்பிலாத் தலைவரும் "ஜே. பி" என்று அனைவராலும் அன்புடன் அழைக்கப்பட்டவருமான திரு செயப்பிரகாச நாராயணர் *8—10—79* காலை பாட்னவில் தமது *77*ஆம் அகவையில் காலமானர் என்ற செய்தி அறிந்து வருந்துகிருேம்.

திரு செயப்பிரகாசர் அமெரிக்கா சென்று அங்குள்ள பல்கலைக் கழகங்கள் சிலவற்றில் *8* ஆண்டுகள் படித்து இறுதியாக ஓகியோ பல்கலைக் கழகத்தில் எம். ஏ. பட்டம் பெற்ருர். அமெரிக்காவிலிருந்து திரும்பியபின் பண்டித சவகர்லால் நேரு அவர்களின் அரிய அறிவுரைகளைக் கேட்டுப் பல தொழிற் சங்கங்களில் தலைவர் பதவி ஏற்றுத் தொழிலாளர் நலத்திற்காகப் பாடுபட்டார். குமுகாயப் பொதுவுடைமைக் கொள்கையில் (Socialism) ஈடுபாடு பெரிதும் கொண்டு, பல கிளர்ச்சிகளில் ஈடுபட்டுச் சிறை ஒறுப்புக்களுக்கு ஆளானர். *1975* ஆம் ஆண்டில் ஏற்பட்ட நெருக்கடி நிலையில் மீண்டும் சிறைப்பட்டு, அதன் காரணமாக உடல் நலிவுற்ருர். *1976*இல் விடுதலை பெற்ற பின்னரும் தொடர்ந்து ஏற்பட்ட நலிவு இறுதி வரையில் நீடித்தது. இங்ஙனமெல்லாம் தமக்கென வாழாப் பிறர்க்குரியாளராக வாழ்ந்த அந் நல்லாரை இழந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தார்க்கும் அரசியல் நண்பர்கட்கும் எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்ளுகிருேம்.

மறைமலையடிகள் நூல்நிலைய வளர்ச்சிக்கு நன்கொடை

(செல்வி சிலம்பு ௫௪–௫௭ ஆம் பக்கத் தொடர்ச்சி)

உயர்திரு. வ. சுப்பையாபிள்ளை அவர்கள் கழக ஆட்சியாளர்	10	00
,, ஆ. சுப்பையா பிள்ளை அவர்கள், கழக மேலாளர்	5	00
திரு. அ. தி. வ. ஈசுவர், சென்னை-1	5	00
,, மா. ரா, இளங்கோவன் M.A., சென்னை	51	00

மதிப்புரை

ஆராய்ச்சி முறையில் ஓர் அறிமுகம்

[**ஆசிரியர் :** மு. பொன்னுசாமி, எம். ஏ., எம். பில். கலா பதிப்பகம் கோயமுத்தூர் **விலை :** உருபா 7-00.]

கல்வியின் பயன் அறிவு. அறிவின் பயன் ஆராய்ச்சி. அத்தகைய ஆராய்ச்சிகள் பல்கிப் பெருகிவரும் காலம் இது. கல்வி ஆர்வமுடையோர் பட்டப் படிப்போடு சிற்காமல் ஆராய்ச்சிகளில் ஈடுபடுகின்றனர் பல்கலைக் கழகங்களும் அத்தகைய ஆராய்ச்சியாளர்க்குப் பேராதரவு தந்து வருகின்றன. இந் நிலையில் ஆராய்ச்சி என்றால் என்ன? அஃது எங்ஙனம் அமைதல் வேண்டும்? ஆய்வின் படிமுறைகள் யாவை? ஆய்வேட்டினை அமைப்பது யாங்ஙனம் என்பன பற்றியெல்லாம் 18 தலைப்புக்களில் இந் நூலாசிரியர் விரித்துரைக்கிறார். ஆராய்ச்சி பற்றியே ஆராயும் இந் நூல் ஒரு புதுமுயற்சி என்பதில் ஐயமில்லை. சுருங்கச்சொல்ல வேண்டுமானால் ஆராய்ச்சித்துறை மாணவர்க்கெல்லாம் இஃது ஒரு பாட நூலாகவும், தக்க வழிகாட்டியாகவும் அமைந்துள்ளது எனலாம். ஆசிரியரின் முயற்சி பாராட்டத்தக்கது—பயனுள்ளது.

பெரியார் அண்ணா பெருமை (கவிதைகள்)

[**இயற்றியவர் :** கலைமாமணி, கவிஞர்கோ, புத்தனேரி, இரா. சுப்பிரமணியம், தமிழ்க்குடில், 14 சினடாஃப் முதல் தெரு. சீதம்மா எக்ஸ்டென்ஷன், சென்னை-600018, **விலை :** உருபா 1-50.]

சீர்திருத்தத் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகிய இரு பெருந் தலைவர்களின் அறிவு, ஆற்றல், சீர்திருத்தப்பணி, பகுத்தறிவுப் பணி, அரசியற் பணி ஆகியன பற்றியும், அவர்தம் பண்பு நலன்கள் பற்றியும் கூறும் இனிய எளிய சுவையான கவிதைகளின் தொகுப்பே இச் சிறு வெளியீடு. அளவில் சிறியதாயினும் கவிதை நலத்திலும் சுவையிலும் அரிய நூலாகும். எல்லாரும் படித்தின்புறவும் தந்தை பெரியார், அறிஞர் அண்ணா இவர்களைப் பற்றிச் சுருக்கமாகத் தெரிந்து கொள்ளவும் பயன்படும் பாடல்கள் கொண்டவை. படித்துப் பாருங்கள்.

திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக, சென்னை, 80, பிரகாசம் சாலை, அப்பர் அச்சகத்தில் திரு. வ. சுப்பையா அவர்களால் அச்சிடப்பெற்றது.
ஆசிரியர் : வ. சுப்பையா.

கழக நிலையங்களில் கிடைக்கும்

பிற பதிப்பாளரின் புதிய வெளியீடுகள்

தமிழிலக்கிய வரலாறு—ஞா. தேவநேயப் பாவாணர்	12	00
மொழிவழிச் சிந்தனைகள் —தவத்திரு குன்றக்குடி அடிகளார்	3	75
பெரியார் ஒரு பொருள் முதல்வாதி —பு. செயகுட்டுவன், பி.எசி., பி.டி.	8	00
காந்தியடிகளைச் சந்தித்தேன்—ம. பொ. சிவஞானம்	4	00
கவி உலகில் கம்பன் ச. து. சு. யோகியார்	7	50
பெரியார் அண்ணா பெருமை —புத்தனேரி இரா. சுப்பிரமணியம்	1	50
இன்றுபோய் நாளைவரும்—ஜெகசிற்பியன்	12	50
மார்க்கோ போலோ—வி. எஸ். வி. இராகவன்	7	50
பிருந்தாவனம்—கவிஞர் கண்ணதாசன்	10	00
மனித பலவீனங்களும் நீக்கும் வழிகளும் —இரத்தின சண்முகனார்	9	00
நோய் நீக்கும் மூலிகைகள்—எஸ். ஏ. சூசைராஜா	7	00
உளவியலும் கல்வியும்—ம. அய்யாசாமி	7	00
இமயத்துக்கு அப்பால்—ஜெயகாந்தன்	4	00
நோய் தீர்க்கும் யோகாசனங்கள்—இரத்தின சண்முகனார்	10	00
500 மூலிகைகளின் அரும்பயன்கள்—என். ஜனார்த்தனன்	6	00
இதயக் கோயில்—இலட்சுமி ராஜரத்தினம்	13	00
திருமலையான் திருவருள்—நாகர்கோயில் கிருஷ்ணன்	15	00
பிரார்த்தனைக் களஞ்சியம்— ”	1	20
அதிர்ஷ்ட நியுமராலஜி ஜோதிடம்—பாலகுமரன்	6	00
சாமுத்ரிகா லட்சண சாத்திரம்—என். ஜனார்த்தனன்	3	50
அதிர்ஷ்ட ஜோதிட கணிதம்—மயிலை பூபதிராஜா	6	00
இந்திர தனுசு—ஜெகசிற்பியன்	5	00
கடல்மல்லைக் காதலி—விக்ரமன்	16	00
திருமுறைத்தெளிவே சிவஞானபோதம் —வை. இரத்தினசபாபதி	15	00
பெரியபுராணம் இலக்கியச் சொற்பொழிவு —வித்துவான் மு. ரா. கந்தசாமிக் கவிராயர்	10	00
அறிவியல் படைத்த அற்புதங்கள்—உமாநாயகன்	4	00
கலைவாணர்பற்றித் தமிழறிஞர்கள் —பண்டித ரத்னு என். ஏ. வேலாயுதம்	5	75
A Text-Book of Indian History —Rev. G. U. Pope, M.A., D.D.	135	00
A Hand Book of the Tamil Language —Rev. G. U. Pope, M.A., D.D.	95	00
The Ramayana in Telugu and Tamil A Comparative study—C. R. Sarma	15	00

பதிவு எண் : M. 4899

கழகப் புதிய வெளியீடுகள்

MAGNIFICENT MADURAI

—Yogi. Shuddananda Bharati

மதுரைமாநகரில் சிவபெருமான் நிகழ்த்திய திருவிளையாடல்கள் பற்றிய கருத்துக்களும், மதுரையின் தெய்வீக மாண்பும், தமிழரல்லாத வெளிநாட்டினர் படித்து மகிழும் வண்ணம் ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ளது இவ்வழகிய சிறு நூல். ரூ. 2-00

மேல்நிலைப் பள்ளி மாணவர்கட்கேற்ற பொருளியல் நூல்கள் (Economics)

பேராசிரியர் மா. பா. குருசாமி அவர்களால் எழுதப் பட்டு, சென்னைப் பல்கலைக் கழகப் பொருளியல் துறைத் தலைவர் டாக்டர் வேதகிரி சண்முகசுந்தரம் அவர்களின் அணிந்துரையுடன் கூடிய நூல்கள் :

ஆங்கிலேயர் ஆட்சிக்கு முந்திய இந்தியப் பொருளாதாரம்

(Indian Economy before British Rule)

ஆங்கிலேயர் இந்தியாவுக்கு வருமுன்னர் இருந்த இந்தியப் பொருளாதார நிலையினையும், அவர்களின் வருகைக்குப்பின் ஏற்பட்ட நன்மை தீமைகளையும் கூறும் நூல். ரூ. 5-00

ஆங்கிலேயர் ஆட்சியில் இந்தியப் பொருளாதாரம்

(Indian Economy during British Rule)

இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சி ஏற்பட்டபின் இந்தியப் பொருளாதாரத்தில் ஏற்பட்ட மாறுதல்கள், ஒருமைப் பாடு ஆகியன பற்றி இந் நூலில் கூறப்படுகின்றன. ரூ. 5-00

பொருளாதார அமைப்புக்கள் (Economic Systems)

முதலாளித்துவம், சதர்மம், கூட்டுப் பொருளாதாரம் ஆகிய மூவகைப் பொருளாதார அமைப்புக்கள் பற்றிக் கூறும் இந்நூல். ரூ. 4-00

வருவாயும் வேலைவாய்ப்பும்

(National Income and Theory of Employment)

இந்திய நாட்டு வருவாய்க் கணிப்பு, வேலை வாய்ப்புக்கள், வேலை இன்மையால் விளையும் சிக்கல், வருவாய்ப் பகிர்வு ஆகிய செய்திகள் இந் நூலில் கூறப்படுகின்றன. ரூ. 4-00

மதுரைக் கோயில் வரலாறு

ஆசிரியர் : புலவர் இரா. இளங்குமரன்

மதுரை மீனாட்சி, சொக்கநாதர் கோயில்கள், பொற் றாமரைக் குளம் ஆகியவற்றின் அமைப்பு, மாண்பு, திருவிளை யாடற் புராணச் சிற்பங்கள் ஓவியங்கள் ஆகியனபற்றி இருவர் உரையாடல் முறையில் இனிய தமிழ்நடையில் விளக்கமாகக் கூறும் வரலாற்று நூல். பொதுநூலகங்கள்தோறும் இடம்பெற வேண்டிய சிறப்புடைய நூல். படங்களுடன் விரைவில் வெளி வரும்.